தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆடி 29 (13-8-'60). சனிக்கிழமை | இதழ் 9

அந்தகாரத்து இருள். மெரினாவின் கடலோசை காதைப் பிளந்தது. வானத்துக் காதலியை வாரியணைக்க அலைகள் எழுந்து எழுந்து ஆனந்தக் கூத்தாடின. அந்தக்கூத்திலே இரு உருவங்கள், "ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள்; காப்பாற்றுங்கள்!" என்று அலறித் துடித்தன. கையைக் காலை ஆட்டிக் குய்யோ முறையோவென்று கூக்குரல் போட்டன. மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்க, வெவ்வேறு திசை நோக்கி மிதந்துகொண்டிருந்த அவ்விரு உருவங்களும் அலையின் சுழிப்பில் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்தன ஒரு உருவம் தன்னைக் காப்பாற்றும் பொருட்டு மறுஉருவத்தைக் கட்டிப் பிடிக்க, மறுஉருவம் பக்கத்து உருவத்தோடு தன்னை பிணைத்துக் கொண்டது எப்படியோ, கடல்தப்பிக் கரை சேர்ந்தன, அந்த உருவங்கள்!

ஓர் உருவம்! வாளிப்பான உடல்-வாலிபத்தில் குறு குறுப்பு! கட்டுடல் பெற்ற அவன் மதிமுகத்திலிருந்த மீசை கரு கருவென்றிருந்தது.

மறு உருவம்! வாடித்தளர்ந்த மேனி - முதுமையின் முத்தாய்ப்பு! கட்டிழந்த அவன் நரை முகத்திலிருந்த தாடி மொளு மொளு வென்றிருந்தது.

தன்னுணர்வு வந்தவுடன் இளைஞன் கிழவனை முறைத்தான். கிழவன், வாலிபனை வெறித்துப் பார்த்தான். "நீங்கள் யார்?" என்ருன் வாலிபன், "உலகத்தை உதறிவிட்டுச் சாக வந்த சடலமிது" என்று முதியவன் சொல்லிக்கொண்டே தாடியை உலர்த்தினன். அதைக் கேட்ட இளைஞன் தாடியைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"நீ யார்?" என்றது கிழவன் குரல். 'கடல் அன்னையின் மடியிலே உயிர்விடவந்த கபோதி" என்று தன்னைப் பார்த்தே தூற்றியபடி பதிலளித்தான் இளைஞன். அத்தோடு சட்டையைக் கழற்றினன். அப்போது முதியவன் சலனமற்ற பெருஞ் சிரிப்புச் சிரித்தான் - அதாவது கெக்கலித்தான்! தொப்பையாக நனைந்திருந்த சட்டையால் முகத்தை துடைத்துக் கொண்டிருந்த வாலிபன் கேலிச் சிரிப்பைக் கேட்டு கிழவன் பக்கந் திரும்பி, "ஏன் சிரிக்கிறீர்கள்? எதற்காகச் சிரிக்கிறீர்கள்? என்று ஆங்காரமாகக் கேட்டான். அதற்கு நிதானமாகத் தாடியைத் தடவிக் கொண்டே கிழவன் சொன்னன்: — "எல்லாம் நம்மைப்பற்றித்தான். நீயும் சாக வந்தாய். நானும் சாக வந்தேன். கடலில் விழுந்து சாகப் போன நாம் உயிர் போகுந்தருணத்தில் "ஐயோ!" என்றலறி உயிர் மேலிருக்கும் ஆசையை வெளியாக்கினேம். அலையோசையால் ஒன்று சேர்க்கப்பட்டோம். அதனல் இருவரும் கட்டிப் பிடித்தோம்-கரை சேர்ந்தோம். அந்தக் கோழைத் தனத்தை நினைத்தால் நெஞ்சம் சிரிக்காமல் என்னப்பா செய்யும்?" இப்படிக் கூறிக்கொண்டே வந்த முதியவன் மறுபடியும் பேய்ச்சிரிப்புச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் ஜுவாலையில் வாலிபன் முகம் கோபத்தைக் கொட்டியது. "கோழையென்று சொல்கிறீர்கள்? வாழ விரும்பும் மோழையல்ல நான். இதோ சாகப் போகிறேன்" என்று கர்ஜித்தான். கடலலைகளிலே ஓட்டம் பிடித்தான்-கருமீசைக்காரன்! அதைக் கண்ட வெண்தாடிக் கிழவன் பின்னலேயே ஓடி வாலிபன் கையைப் பிடித்து இழுத்துவந்து முன்பு அமர்ந்திருந்த மணற்பரப்பில் உட்கார வைத்தான். ஆனல் "என்னை விடுங்கள். நான் சாகிறேன்" என்று கைப்பிடியைத் தளர்த்தித் தப்பிச்செல்லத் துடித்தன வாலிபக் கைகள். இறுகப் பிடித்துக் கொண்ட வயதானவன், "சற்றுப் பொறு அப்பா. நானும் சாகத்தானே வந்திருக்கிறேன்" என்று ஆசுவாசப் படுத்தினன். "உண்மையாகவா?" என்று இளைஞன் புருவத்தை நெறித்துக் கேட்டான். "ஆம் அப்பா. சாகத் துணிந்துவந்த நாம் முன்வைத்த காலைப் பின் வைக்கக்கூடாது. சாவோம் ஆனல்..."

"ஆனல்..."

"சாவதற்குமுன் நாம் ஏன் சாக வந்தோம் என்ற காரணங்களை இருவருக்குள் பரிமாறிக்கொண்டால் நிம்மதியாகச் சாகலாம் அல்லவா? அதனல்தான் உன்னைக் கொஞ்ச நேரம் நிறுத்தியிருக்கிறேன்" என்று நிதானமாகப் பேசினன் கிழவன். அந்தக் கிழட்டு முகத்தை ஆச்சரியக் கண்களால் துழாவிப் பார்த்த வாலிபன், "எங்கே சொல்லுங்கள் முதலில், நீங்கள் சாகவந்த காரணத்தை?" என்று வினவினன். வயதானவன் வாய் திறந்தான்.

"மந்தை வெளியிலே சீர்திருத்தக் கழகத்தின் செயலாளர் சிங்காரவேலுவைக் கேள்விபட்டிருப்பாயே, அது நான்தான். சீர்திருத்தக் கழகத்தில் பணியாற்றிப் பல போராட்டங்களில் பங்கேற்றுச் செயலாளரானேன். ஆனல்...அந்தப் பதவிதான் என் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டது-எண்ணத்தை மண்ணாக்கி விட்டது-என் மனைவி ஓடிப்போய் விட்டாள்!

என்னடா இப்படிச் சொல்கிருனே? என்ரு வியக்கிருய்? இளைஞனே, உண்மையிலேயே நடந்து விட்ட களங்கம்-இல்லறத்தில் ஏற்பட்ட மாசு இதுதானப்பா!

நான் ஊரும் உலகமும் வாழ உடல் பொருள் ஆவி விட்டுப் பணி புரிந்து பேரும் புகழும் வாங்கி வந்தேன். என் மனைவியோ எதிர் வீட்டு என்ஜினியரைக் கண்ணால் கவனித்து காதலால் களித்து வந்திருக்கிருள் அந்த உறவுமுறை, என்னையும் நான்பெற்ற நான்கு மழலைச் செல்வங்களையும் நட்டாற்றில விட்டுவிட்டு அந்தப் பயலோடு அவள் ஓடி மறைந்த அன்றுதான் எனக்குத் தெரியும. "பாவி! முப்பதைந்து வயதில் கூட மூதேவிக்கு என்ஜினியரோடு காதலா? எங்களைத் தவிக்க விட்டு ஓடிப்போய் விட்டாளே?" என்று எண்ணி எண்ணி என் மனப் புண ஆருத புண் ஆனது.

இளைஞனே! அதனல் ஏற்பட்ட அவமானத்தை என்னல் தாங்க முடியவில்லை. உலகததார், "வீட்டுப் பெண்ணை ஓடவிட்டவன் நாட்டுக்கு என்ன நனமை செய்துவிடப் போகிருன்?" என்று என்னைச சொல்லம்புகளால் சுட்டனர். என்னல் பொறுக்க முடியவில்லை. வாழ்வையே வெறுத்துவிட்டு இங்கே சாக வந்திருக்கிறேன்.

வாலிபனே! உனக் கொன்று சொல்வேன். பெண்கள் தெய்வப் பிறவிகளல்ல - காமப் பிசாசுகள! தாய்மையின் உருவங்களல்ல அவர்கள்-வெறும் உணர்ச்சிப் பிண்டங்கள! எனக்கு மட்டும் அழிக்கும சகதியிருந்தால் பெண்ணினத்தையே பொசுக்கிடுவிவேன்" என்று ஓங்காரக் கூச்சலிட்டான் கிழவன். அப்போது தாவி யருகில் வந்த வாலிபன் பேசவிடாமல் கிழவன் வாயை அடைத்துக்கொண்டே, "அப்படிச் சொல்லாதீர்கள். அழிக்கும் சக்தி மட்டும் எனக்கிருநதால ஆண

—5-ம் பக்கம் பார்க்க—

சிறுகதை: எழுதியவர் விருதைவாசன்.

[இந்தி எதிர்ப்புக் கவிதைப் போட்டி என்று தென்றலில் அறிவித்தவுடன் தினந்தோறும் இந்தி எதிர்ப்புக் கவிதைகள் அலுவலகத்தில் மலை மலையாய்க் குவியலாயின. இதுவரை மொத்தம் 863 கவிதைகள் வந்துள்ளன. அத்தனையும் ஒரே உணர்ச்சிமயம்! உணர்ச்சி வேகத்தில் இலக்கணத்தைத் தாண்டிப்போன கவிதைகளும் பல இருந்தன. அத்தனை கவிதைகளையும் நாம் படித்து முடிப்பதற்குள் இந்தி எதிர்ப்புப் போரில் ஒரு படி வெற்றியும் நமக்குக் கிடைத்துவிட்டது. "வெற்றி மகளாய் நின்றாய்!" என்ற இந்தக் கவிதையைப் பரிசுக்குரிய தெனத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.—ஆ-ர்.]

வெற்றி மகளாய் நின்றாய்!

அற்பவிலை விண்மீனைப் பறித்தே உன்றன்
அழகுக்குத் தருவதுவும் பொருந்தா தென்று
கொற்கையிலே மூச்சடக்கிக் கடலில் மூழ்கிக்
கொண்டுவந்த சுடர்வீசும் முத்தை, உன்றன்
பொற்கையிலே என்பரிசாய் அளித்தேன்; நீயோ
பூட்டில்லாச் செவ்வதரப் பெட்டிக் குள்ளே
பற்களென வைத்திருக்கும் முத்தைக் காட்டிப்
பரிகாசம் செய்வதுபோல் நகைத்து நின்றாய்!

வடநாட்டார் முதுகெலும்பை நொறுக்கி, வாயில்
வடிகின்ற கொழுப்பெரித்துச் சாம்ப லாக்கி
இடர்கூட்டி வருகின்ற இந்திப் பேயை
இடுப்பொடித்துக் கண்டதுண்ட மாக வெட்டிப்
படர்காற்றில் மீன்கொடியைப் பறக்க விட்டுப்
பாண்டியன்நான் உனைக்காண வந்தேன்; நீயோ
கடையோரக் கண்வீச்சில் இரண்டு வெற்றிக்
கயற்கொடியைப் பறக்கவிட்டு முன்னே வந்தாய்!

மடைதிறந்து பாய்கின்ற புதுவெள் ளம்போல்
மறவரெலாம் மானத்தைக் காக்கத் தத்தம்
கடைதிறந்து வாளுருவிச் சீறு கின்றார்!
சமகத்தின் ஆணையென மோது கின்றார்!
படைதிரண்டு கிளம்பிடுமுன் தமிழ்த்தாய் அன்புப்
பாதத்தில் வணங்கிடவே நினைத்தேன்; அங்கே
இடைஒசிய இன்தமிழின் உருவில் நீதான்
எதிர்வந்து "வெல்க!"வென வாழ்த்தி நின்றாய்!

"கோட்டைகளைத் தகர்த்தெறியும் மறவர் கூட்டம்
குறிவைத்தால் இந்திமொழி தூள்தூ ளாகும்!
வேட்டைக்குக் கிளம்பிடுவீர்! எச்சரிக்கை
விடுத்திடுவீர்!" என்கின்ற முழக்கம் கேட்டு,
நாட்டினிலே போராட்டம் தனிற்க லந்து
நான்வெற்றிப் பெருமகளைத் தழுவு முன்னே,
வீட்டினிலே ஒத்திகைகள் பார்ப்ப தேபோல்
வெற்றிமக ளாய்என்னைத் தழுவி நின்றாய்!

—சு. பத்மநாபன். எம். ஏ. வகுப்பு
தியாகராசர் கல்லூரி, மதுரை

ஓரங்க நாடகம்

மகேந்திர வர்மன் மண்டபம்

சீனி, ஜெகதீசன் சேலம்

காட்சி 1.

மாலைநேரம்.

மாமல்லபுரத்துக் கடற்கரையோரம்.

சிற்பி சத்தியசீலரும், அவரது மாணக்கன் குணசீலனும் சிற்பங்களை உருவாக்கும் பணியில் ஆழ்ந்திருக்கின்றனர்.

சத்தியசீலர்: என்ன குணசீலா, எதைப் பற்றி இவ்வளவு நேரம் சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்?

குணசீலன்: ஒன்றுமில்லையப்பா... சிவந்த வானமும், சீறும் கடலும் என் சிந்தனையைத் தூண்டி, எங்கோ என்னை இழுத்துச் சென்று விட்டன. குருதிச் சிவப்பேறிய வானத்தைக் கண்டு கடல் குமுறுவது போல், குறைபடிந்து போனஎன் வாழ்க்கையை நினைக்கும் பொழுதெல்லாம் என் உள்ளம் குமுறுகிறது... கொந்தளிக்கிறது.

சத்திய: குணசீலா...இவ்வாறு நீ உணர்ச்சி அலைகளுக்கு அடிமை ஆகி விடுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லை.

குண: குறைமிகுந்த நெஞ்சம் கடன்பட்ட நெஞ்சத்தைவிட மோசமானது என்பது தாங்கள் அறியாத ஒன்றல்ல. என் தாயின் குறை எண்ணும் பொழுதெல்லாம் என்னை எரிமலையாக்கிவிடுகிறது வேலேந்தி வாளேந்தி வேழங்களிடையே வேங்கையெனச் சென்று வேட்டையாடும் அளவுக்கு என்னை வளர்த்துவிட்டீர்கள் ஆனால் என் தாயைப் பற்றிய ஒரு மாபெரும் உண்மையை என்னிடமிருந்து நீங்கள் மறைக்கின்றீர்கள். புவியரசர் பலர் புகழோங்கி வாழ்ந்த இப்பல்லவர் மண்ணில் புல்லன் ஒருவன் தோன்றினான், புகழினை மறைக்கவந்த புழுதிப்படலம் போல். மடமை மேலிட கடமை துறந்த அவன் என் தாய்க்கு ஓர் கொடுமை இழைத்துவிட்டான், என்ற இந்த கதையை என்னிடம் பன்முறை கூறிய நீங்கள், என்தாய் யார்? அவளுக்கு நேர்ந்ததென்ன? என்பதுபோன்ற நான் அறியாத உண்மைகளை மறைக்கிறீர்கள். கடல்நீரே கொதிக்கத் தொடங்கிவிட்டபொழுது அதன் கொதிப்பை அடக்க நீங்கள் தண்ணீர் தேடி அலைகின்றீர்கள்...

சத்திய: பொறுமையாக இரு குணசீலா; பொங்கி எழாதே ஆத்திரத்திற்கு அணை போட்டுவிட்டு நான் கூறுவதை கவனமாகக் கேள். அது பல்லவருக்கும் சாளுக்கியருக்கும் ஓயாமல் போர் நடந்து கொண்டிருந்த காலம். பல்லவன் மகேந்திர வர்மனுக்கும், புலிகேசிக்கும் இடைவிடாமல் போர் நடந்துகொண்டிருந்தது. மன்னர்கள் மண்மீது வைத்த ஆசை மக்களின் வாழ்வை அழித்தது. போர் உச்சநிலையை அடைந்தது. பல்லவர் படைகள் வெங்கி நாட்டுக்குள் புகுந்து வேட்டையாடத் தொடங்கின. அப்பொழுதுதான் அந்த சம்பவம் நடந்தது. உன் தாய் பருவமெய்திப் பூத்துக் குலுங்கிப் புன்னகை உதிர்க்கும் பொன்மலர் போல் இல்லற இன்பம் சுவைக்கக் காத்திருந்தாள். அவளுடைய பெற்றோர் உற்றோர் அனைவரும் போரிலே மாண்டார்கள். எழில் வடிவாய், எழுதிய ஓவியமாய், பழுதில்லா நன்மணியாய், பரிதியின் ஒளியுருவாய் பருவத்தின் படியில் நின்ற அவள் பல்லவன் மகேந்திரவர்மனின் பார்வையிலே பட்டாள். வேங்கை எதிர்ப்பட்ட வெள்ளாட்டுக்குட்டி போல் வேல்விழியாள் துடிதுடித்தாள். நாகத்தின் வாயில் சிக்கிய நுணலானாள் நங்கை. கண்ணியத்தை மறந்தான் காவலன். சூடவிருந்த மல்லிகையின்மேல் சுடுநீரை ஊற்றியதுபோல், மலரவிருந்த அவள் வாழ்வை மண்மூடிப் புதைத்தான் மன்னவன். அந்தோ!...அவள் கற்பிழந்தாள், கண்ணிழந்த ஓவியமானாள், பண்ணிழந்த பாடலானாள். காளையுன்னை வயிற்றில் தாங்கி கடுஞ்சினத்தை நெஞ்சில் நிறுத்தி கன்னியவள் என்னிடம் தஞ்சம் புகுந்தாள். போரிலே மகேந்திர வர்மன் மாண்டான். முறை பிறழ்ந்தோனின் வாழ்வு முடிவுற்றது. உன் தாயின் உள்ளம் வைரமானது. நீயும் பிறந்தாய்; உன் தாயும் மகிழ்ந்தாள். ஆனால் அவள் தன் கனவு பலிக்கும்வரை காத்திருக்க கடவுள் விரும்பவில்லை. உன்னை வளர்த்து, வாலிபனாக்கி, வஞ்சத்தை நிறைவேற்றி பல்லவர் குலத்தின்மேல் பழிவாங்கி தனக்கு நேர்ந்த இழிவைத் துடைக்க வேண்டியது என் கடமையென்று கூறிச் சென்றாள். காளையாகி விட்டாய் நீ; கன்னியவள் கண்ட கனவு பலிக்கும் காலமும் நெருங்கி விட்டது; என் கடமையும் ஓரளவு முடிந்துவிட்டது.

குண: அப்பா...போதும்... தூங்கிக்கொண்டிருந்த உலையைத் துருத்திக் கொண்டு வீசி விட்டீர்கள். மகேந்திர வர்மனால் என் தாய் வாழ்விழந்தாள். அவள் மைந்தன் நரசிம்ம வர்மனால் என் தாய் நாடே தீ நாக்குகளுக்கு இரையாகி விட்டது. அப்பா நீங்கள் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டீர்கள். எந்தக் குறுமதி படைத்தவனுடைய குலப்பூண்டே குவலயத்தில் இருக்காமல் நாம்செய்ய வேண்டுமோ அந்த மன்னவனின் பெயர்நிலைக்க நாம் ஏன் பாடுபடவேண்டும்' இந்த நரசிம்மவர்மனுக்காக நாமேன் நாளெல்லாம் உளியோடும் சுத்தியோடும் உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும். முகிலின் அகண்ட வயிற்றிலே மறைந்து விட்ட முழுமதி போல் இருக்கும் இந்தக் கற்பாறைகளைக் காலத்தை வெல்லும் கவினெழுதும் கருத்துக் களஞ்சியங்களாக்கி நமக்கென்ன நன்மை? நரசிம்ம வர்மனுக்கல்லவா இதனால் பேரும் புகழும். வைரிக்குப் போய் வளர்பிறைபோல் புகழை நாம் ஏன் தேடித்தர வேண்டும்.

சத்திய: குணசீலா... இன்னும் என் கருத்து உனக்குப் புரியவில்லை. இந்தப் பாறைகள் பார்க்கும் பொழுதெல்லாம் பல்லவர்களின் புகழைப் பறை சாற்ற வேண்டும் என்று நரசிம்மவர்மன் என்னிடம் வேண்டினான். சிந்தித்துச் சிறந்தபயன் கிடைக்கும் என்று தெரிந்துகொண்டுதான் நான் இப்பணியை மேற்கொண்டுள்ளேன் என்பதை யோசனை செய்யாமல் நீ என்னையே ஏசுகிறாய். இன்னும் சில நாட்கள் நீ உள்ளத்தை இரும்பாக்கிக் கொண்டு, உணர்ச்சிகளைக் கல்லாக்கிக் கொண்டு இருக்க

—11-ம் பக்கம் பார்க்க—

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 13-8-'60 | இதழ் 9

புதிய வெட்டுத் துண்டம், நாகாலாந்து.

மராட்டியம் பிரிந்த பிறகு, ஆளவந்த கட்சிக்காரர்கள் அனைவருமே பேசினார்கள், "இனிமேல் நாடு பிரிய இடங்கொடுக்கமாட்டோம்" என்று. இது அவர்களுக்குப் பழகிப்போன ஒன்று. ஒவ்வொரு முறையும் இப்படித்தான் பேசுவார்கள். பிறகு தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக்கொள்வார்கள். நேரு பண்டிதரிலிருந்து, நேற்றுக்கட்சியில் சேர்ந்தவர் வரையிலே இது நித்தனித்தம் படிக்கும் பாடமாகிவிட்டது.

"பாரத மாதாவைத் துண்டு போடுவதா? பாதகம், பாதகம்! இதைப் பார்த்துக்கொண்டு சும்மாவா இருப்போம்." என்று பாக்கிஸ்தான் பிரிவதற்கு முன்னாலிருந்தே ஓலமிட்டு வருகிறார்கள் அவர்கள். ஆனால், ஒவ்வொரு முறையும். பாரதமாதா அங்கவீனம் அடையும்போதெல்லாம், பார்த்துக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள்.

மராட்டிய அரசு மலர்ந்த பிறகுகூட, இனிமேல் இந்தியாவில் புதிய அரசுகள் ஏற்பட விடமாட்டோம் என்று உறுதிபூண்டார்கள் பாரதமாதாவின் உத்தம புத்திரர்கள். ஆனால், இன்று நாகாலாந்து என்று பெயரில் ஒரு புதிய அரசு-சாதாரண அரசு அல்ல - தனியரசு மலர்ந்திருக்கிறது! இந்தச் செய்தியை இந்தத் திங்கள் முதல் தேதியன்று நேரு பண்டிதர் திருவாய் மலர்ந்து தெரிவித்திருக்கிறார்.

இப்போது பிரிந்திருக்கிற நாகர் நாடு மிகச் சிறிய நாடு. ஆறாயிரம் சதுர மைல் பரப்பும் மூன்றரை லட்சம் மக்கள் தொகையுமேயுள்ள மிகச் சிறிய நாடு. வெறும் மலைக் காடுகள் அடர்ந்த ஒரு சிறுநாடு. "அந்த நாட்டுமக்களின் வாழ்க்கை முறைகளில் தலையிடாமல், அவர்கள் தம்மைத் தாமே ஆண்டுகொண்டு, முன்னேற்றமடைய முழு வாய்ப்பளிக்க வேண்டுமென்பதே நம் எண்ணம்" என்று கூறியிருக்கிறார் நேரு பண்டிதர்.

நாகா பிரதேஷ் என்றோ, நாகா ராஜ்யம் என்றோகூட இந்திய அரசாங்க வழக்கப்படி அந்தப் புதிய அரசுக்குப் பெயரிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாகாலாந்து (Nagaland) என்ற அந்தப் புதிய அரசுக்கு ஆங்கிலப் பெயரிடப்பட்டிருக்கிறது. ஏன் இப்படி என்று பாராளு மன்றத்திற் கேள்வி எழுப்பப்பட்டபோது, தலைமையமைச்சர் நேரு பண்டிதர், நாகர்கள் அப்பெயரைத்தான் விரும்புகிறார்கள் என்று பதிலளித்திருக்கிறார்.

இந்திய அரசின் ஆணவப்போக்கு நாகர்களிடம் பலிக்கவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. தங்கள் நாட்டுக்குத் தாங்கள் நினைத்த பெயரை நினைத்தவாறு சூட்டிக்கொள்வதற்கு அத்தனை உறுதியுடையவர்களாக இருந்திருக்கிறார்கள் - இருக்கிறார்கள் என்பதைத்தான் இதிலிருந்து அறிந்துகொள்கிறோம்.

நாகர்மலைப் பிரதேசமும் துவான்சாங் பகுதியும் சேர்ந்து நாகாலாந்து என்ற பெயரில் தனியரசுடைய நாடாக இயங்கிவரும் என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நாகாலாந்துக்குத் தனிச் சட்டசபையுண்டு. தனி அமைச்சரவையுமிருக்கும். ஆனால், அசாம் கவர்னரே, நாகாலாந்திற்கும் கவர்னராக இருப்பார். நாகர்களின் விருப்பம், இந்திய அரசாங்கத்திலிருந்து முற்றிலும் பிரித்துக்கொண்டு முற்றிலும் தங்கள் விருப்பப்படி தனியரசு நடத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான். நீதியைப் பொறுத்த வரையிலும்கூடத் தங்கள் தனியாதிக்கத்தில் இருக்கவேண்டும் என்பதுதான் அவர்கள் ஆசை. மணிப்பூர் முதலிய நாகர் வாழும் பகுதிகளும் தங்கள் நாட்டுடன் இணைக்கப்படவேண்டும் என்பது அவர்கள் விருப்பம் தங்களுக்கெனத் தனியொரு படை வேண்டும் என்பதும் அவர்கள் வேட்கை. இது மட்டுமல்ல, இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற எந்தச் சட்டமும் தங்கள் நாட்டுச் சட்டசபையின் ஒப்புதல் பெறவிட்டால், அது தங்கள் நாகாலாந்தில் ஒரு சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்ற நிபந்தனையும்கூட விதித்தார்கள். நாக நாட்டினர் மொத்தத்தில், தங்களுக்கு, இந்தியத் துணைக்கண்ட மத்திய ஆட்சியுடன் தொடர்பில்லாத ஒரு தனியரசு வேண்டுமென்பதைத்தான் இப்படிப்பட்ட திட்டங்களையும் வேண்டுகோள்களையும் காட்டிக் கேட்டார்கள் நாகநாட்டுப் பிரதிநிதிகள் தனியரசு என்ற பெயரைக் கேட்டாலே, ஆத்திரங் கொள்ளுகிற இந்திய அரசு இந்த நிபந்தனைகளையெல்லாம் எப்படி ஏற்கத் துணிவுகொள்ளும்?

எப்படியோ, பாதிக்குப் பாதி என்ற நிலையில் நாகர்கள் தங்கள் இதய லட்சியமான தனி நாட்டை யடைந்துவிட்டார்கள். தங்கள் எண்ணப்படியே அதற்கொரு தனிப் பெயரும் சூட்டிக்கொண்டுவிட்டார்கள்.

காட்டுமிராண்டிகள், நரமாமிசம் புசிப்பவர்கள், ஆள்தூக்கிக் குண்டர்கள் நாகரிகமற்றவர்கள் என்றெல்லாம் நேரு பண்டிதரால் நிந்தித்துப் பழித்துப் பேசப்பட்ட அந்த நாகர்கள்-இன்று தமக்கென ஒரு தனிநாடு பெற்றுவிட்டார்கள், இனி அவர்கள், நாகரிகமற்றவர்கள் என்றோ காட்டுமிராண்டிகள் என்றோ யாராலும் ஏசப்படாத நிலைக்கு உயர்ந்துவிட்டார்கள். நாளைக்கு நேரு பண்டிதரும் அவருடைய சீடகோடிகளும் நேருக்குநேர் சரியாசனத்திலிருந்து கைகுலுக்கிப் பேசவேண்டிய நிலைக்கு இன்று அந்தக் காட்டுமிராண்டிகள் உயர்ந்தவர்களாகிவிட்டார்கள். எப்படி இந்த நிலைக்கு அவர்கள் உயர்ந்தார்கள். நாகர்கள்-அமைதியான முறையில் அறவழியில் நின்று போராடியிருந்தால், இந்த உயர்வை அடைந்திருக்க முடியாது. இந்த உண்மையைத்தான் நாகர்களின் இந்த வெற்றி நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நல்லவர்களுக்கு, நாகரிகமுள்ளவர்களுக்கு, நேரு பண்டிதரும் அவருடைய சீடகோடிகளும், படை பரிவாரங்களும் காது கொடுப்பதே கிடையாது. நியாயமான முறையில் தங்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்கிறவர்களுக்கோ, நேர்மையான முறையில் தங்கள் உரிமைகளைத் தேடிக்கொள்ள முற்படுகிறவர்களுக்கோ நேரு சர்க்காரில் அடியும் உதையும் குண்டும் சிறையும் தான் பரிசாகக் கிடைக்கும்.

நாகர்களைப்போல் ஆயுதந்தாங்கிப் போராட முற்படுகிறவர்களுக்குத்தான் கேட்டதைக் கொடுப்பார்கள். நாகர்கள் தங்கள் நாட்டைத் தங்கள் நேரடியாட்சிக்குக் கொண்டுவர இந்திய அரசை எதிர்த்து அறப்போர் நடத்தவில்லை. இரண்டாம் உலகப்போரின் இறுதியில் வெள்ளையரும் ஐப்பானியரும் ஒருவரிடமிருந்தொருவர் தப்பியோடும் சமயங்களில் ஆங்காங்கே போட்டுவிட்டுப்போன துப்பாக்கிகளும் தோட்டாக்களும் பிறபல ஆயுதங்களும் நாகர்கள் கையிலே சிக்கிக்கொண்டன. அவற்றின் துணையைக் கொண்டு நாகர்கள் இந்திய ராணுவத்துடன் எதிர்த்து நின்று போரிட்டனர். குண்டுக்குக் குண்டு சூட்டுக்குச் சூடு என்று அவர்கள் துணிந்து போராடினர். எங்கள் நாட்டில் உங்கள் ஆதிக்கத்தை இருக்க விடமாட்டோம் என்று சொல்லிச் சொல்லிப் போராடினர். எண்ணற்ற காளைகள் தங்கள் இன்னுயிரை இழந்தனர். எப்படியும் இவர்களை அடக்கிவிடலாம் என்று இந்திய ஆட்சியாளர் மனப்பால் குடித்தனர். தங்கள் இராணுவத்தை மேன்மேலும் நாகர்மலைப் பகுதிக்கு அனுப்பிவைத்தனர். பயன்?

இன்று நாகாலாந்து மலர்ந்திருக்கிறது! நாகர்களின் கோரிக்கை முற்றிலும் நிறைவேறவில்லையே தவிர, இந்திய ஆட்சியாளரின் எண்ணம் முழுதும் மண்ணைக் கவ்விவிட்டது.

தாய்மொழி உணர்ச்சியும், தாய்நாட்டுணர்ச்சியும் என்றும் எப்பொழுதும் மக்களை மாற்றார் அடிமைப்பிடியில் அழுத்திக் கிடக்கும்படி விட்டு வைக்காது என்பதை இந்திய ஆட்சியாளர் உணரவேண்டும். அடக்குமுறைகளும், அடிதடியும் சில நாட்களுக்குத்தான் செல்லுபடியாகும். என்றும் மக்கள் உணர்ச்சியை அடக்கியாண்டுவிட முடியாது.

இன்று நாம் திராவிடநாடு கேட்கிறோம் என்றால் இது அர்த்தமற்ற கிளர்ச்சி என்று இளக்காரம் பேசியிருக்கலாம் சிலநாள். யாரோ ஒரு சிலர் எங்கோ ஒரு மூலையிலே கூச்சலிடுகிறார்கள் என்று அலட்சியமாக இருந்திருக்கலாம் சிலநாள் ஆனால், இன்று மக்கள் மன்றத்திலே அந்தக் கொள்கைக்கு - அந்த இலட்சியத்திற்கு மதிப்பும் ஆதரவும் பெருகிவிட்டது என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் உணரவேண்டும். இன்று இருக்கின்ற சமுதாயம் - இன்று நிலவுகின்ற திராவிட சமுதாயம்-அறவழியிலே நின்று நெறிமுறை கடவாத வழியைப் பின்பற்றி - நயமாகவும் நாகரிகமாகவும் தங்கள் எண்ணத்தையும் இலட்சியத்தையும் எடுத்துச் சொல்லிவருகிறது. இதற்கு ஆட்சியாளர் செவிசாய்க்காவிட்டால் - இன்றைய முறையான வேண்டுகோளுக்கு மதிப்பளித்து நடக்கவில்லையானால், நாளைக்கு வருகின்ற சமுதாயம்-நாளைக்கு எழப்போகின்ற இளஞ்சிங்கக் கூட்டங்கள் நாகர்களைப்போல் தங்கள் உரிமைகளைத் தாங்களே எடுத்துக்கொள்வது என்ற முற்றிலும் நியாயமான - முற்றிலும் பொருத்தமான முடிவுக்கு வந்துவிடலாம்! வந்துவிடுவார்கள்! அப்போது இன்றைய இந்திய அரசு முதலில் இராணுவத்தை அனுப்பி அடக்க முற்பட்டாலும்-கடைசியில், மலரும் திராவிடத்திற்கு வாழ்த்துச் செய்தியனுப்ப வேண்டிவரும் என்பதை நினைவுறுத்துகிறோம்!

அந்தநாள் திருமணம்

அவள், மாமைநிறம் (வெண் கவிட்டு நிறம்) உடையவள். அவளுடைய கண்கள், மான்கண்களைப்போல மிரட்சியுடன் - மதர்ப்பு (கம்பீரம்) உடையனவாகக் காணப்படும். அவளுடைய கூந்தல், வாரிவிட்டதால் ஒடுங்கி, ஈரம் பொருந்தியதுபோல் பளபளப்பாக இருக்கும். அத்தகைய வடிவழகி அவள்.

அவளை, எனது வாழ்வுக்கும் உயிருக்கும் துணைவியாய் திருமணம் செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

வரிசையாகக் கால்களை நட்டு, குளிர்ச்சி தரத்தக்க பெரிய பந்தலிட்டார்கள். பிறகு, பந்தல் முழுவதும் மணலைக் கொண்டுவந்து பரப்பினார்கள். அது, நன்றாக விடிந்த காலை நேரம்.

அன்றையதினம், திங்கள், நல்ல நாண்மீனு (நட்சத்திரம்)க்கு வந்திருந்தது. 'அதுதான் திருமணத்திற்கு நல்ல நாள்'' என்று, முடிவு செய்தார்கள். உடனே, வீட்டு விளக்கைக் கொளுத்தி, அதற்கு மலர் மாலை சூட்டினார்கள்.

விருந்துக்குச் சமையல் நடந்து கொண்டிருந்தது உழுந்தம் பருப்பை நிறையச் சேர்த்துச் செய்த பெருஞ் சோறு மலைபோலக் குவிந்து நின்றது. முதிர்ந்த வயதும், சிறப்பும் பொருந்திய பெண்கள் சிலர், தலையில் ஒரு குடமும், கையில் ஒரு கலமு (தோண்டி என்றும் சொல்வர்)ம், கொண்டுபோய்த் தண்ணீர் எடுத்து வந்தார்கள்.

அப்போது, ஆண்குழந்தை பெற்ற-தேமல் படர்ந்த வயிறும். ஒளிமிகுந்த ஆபரணங்களும் உடைய நான்கு பெண்கள் கையில் அலரிப்பூக்களும், நெல்லும், வைத்துக்கொண்டிருந்தார்கள்.

மணமகள் அழைத்துவரப்பட்டாள். உடனே. தண்ணீர்க்குடம் கொண்டு வந்த பெண்கள், அவைகளை, ஒருவர் பின் ஒருவராக, நெல்லும், அலரிப்பூவும் வைத்திருந்த பெண்களிடம் கொடுத்தார்கள்.

அந்தக் குடங்களை வாங்கிய அந்தப் பெண்கள், ''கற்புநெறி வழுவாமல் நல்ல பல உதவிசெய்து கொண்டு கணவன் பெருமை அடையத்தக்க துணைவியாய் வாழ்வாயாக'' என்று வாழ்த்திக்கொண்டே, தண்ணீரையும், நெல்லையும், அலரிமலரையும், மணமகளின் தலையிலே பெய்தார்கள். மணமகளின் கன்னமெல்லாம் நெல்லும். அலரிமலரும், ஒட்டிக் கொண்டிருந்தன.

அவ்வளவோடு எங்கள் திருமணச் சடங்கு முடிந்தது. பகற்பொழுது கழிந்து இரவு வந்தது.

நான் எனது படுக்கை அறையில் இருந்தேன். அது, முதல் இரவு

கலகல என்று பேசிக்கொண்டு. மணமகளை அழைத்துவந்தனர் சில பெண்கள். மணமகளின் தாய்தந்தை சுற்றத்தார் அனைவரும் 'பெரிய வீட்டுக்கு உரியவளாய் வாழ்வாயாக'' என்று வாழ்த்தினர். திடீரென்று நான் படுத்திருந்த அறைக்குள் மணமகளைச் சேர்த்துவிட்டுப் பெண்களெல்லாம் போய்விட்டார்கள்.

என் வாழ்க்கைத்துணைவி உள்ளே வந்தாள். அவள் உடுத்திருந்த கோடிப்புடவையால் முகம் உட்பட உடல் முழுவதையும் மூடிக் கொண்டு, வளைந்து ஒடுங்கிப் படுத்து விட்டாள்.

காதல் விருப்பத்தோடு நான் எழுந்தேன். அவளை, ஆரத் தழுவினேன். முகத்தை என் பக்கமாகத் திருப்பி அதனை, மூடியிருந்த புடவையை விலக்கினேன்.

உடனே அவள் அச்சத்தால் பெருமூச்சுவிட்டாள். 'இனிமை மிக்க புன்முறுவல் உடையவளே! என்னைக் கண்டு நீ ஏன் அஞ்சவேண்டும்? உன் நெஞ்சத்தில் தோன்றிய எண்ணங்களை ஒளிக்காமல் என்னிடம் சொல்!'' என்றேன்

அவள், சிறந்த உச்சிக்கொண்டையும், ஒளியும் மிகுந்த காதணி அசைந்தாட முகத்தை என்பக்கம் திருப்பிக் கொண்டு நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சியுடன் ஒன்றும் சொல்லத்தோன்றாதவளாய் ஒய்' என்கிற ஒலியுடன் என்னை வணங்கினாள்.

பண்டைக்காலத் தமிழர்கள் செய்த திருமண முறையும், அதன் சடங்குகளும், முதல் இரவு நடவடிக்கைகளும் ஓவியம் தீட்டிக் காட்டுவது போல் காவியம் தீட்டிவைத்தார் நல்லாவூர்க்கிழார் என்னும் நல்லிசைப் புலவர்

வருமாறு :—

''உழுந்து தலைப்பெய்த
  கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை
  நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த்
  தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து
  மாலை தொடரிக்
கனை இருள் அகன்ற
  கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய
  கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ்
  நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர்
  புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை
  முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும்
  முறைமுறை தரத்தரப்
புதல்வன் பயந்த
  திதலையவ் வயிற்று
வால்இழை மகளிர்
  நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ
  நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும்
  பிணையை ஆகுஎன
நீரொடு சொரிந்த
  ஈரிதழ் அலரி
பல்இருங் கதுப்பின்
  நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம்
  கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர்
  ஞெரேர் எனப்புகுந்து
பேரிற் கிழத்தி
  ஆகுஎனத் தமர்தர
ஓரிற் கூடிய
  உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக்
  கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த
  ஓர்புறம் தழீஇ
முயங்கல் விருப்பொடு
  முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த
  காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்தது
  எஞ்சாது உரைஎன
இன்னகை இருக்கை
  பின்யான் வினவலின்
செஞ்சூட்டு ஒண்குழை
  வண்காது துயல்வர
அகமலி உவகையள்
  ஆகி முகன் இறைஞ்சி
'ஒய்'என இறைஞ்சி
  யோளே மாவின்
மடம்கொள் மதையநோக்கின்
ஒடுங்கு ஈர்ஓதி மாஅயோளே!''

அகம்—86

இதனை,

அகநானூற்றுப் பழந்தமிழ்க்களஞ்சியத்தில் காண்கிறோம். தமிழர்களின் பண்டைத் திருமணமுறையைத் தெளிவுற விளம்புகின்ற செய்யுள் இது ஒன்றே காணப்படுகிறது.

இது தவிர்த்த தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும்——

'வாய்நல்லார் நல்ல
  மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணற்
  படுத்துப் பரிதிவைத்து
காய்சின மாகளிறு
  அன்னான் என்கைப்பற்றித்
தீவலம் செய்யக்
  கனாக்கண்டேன் தோழீநான்.'

என்பது போன்ற ஆரியப்புரோகிதத் திருமண முறைகளே காணப்படுகின்றன.

ஆராயும்போது, திருமணத்திற்கு இதுதான் முறை. இதுதான் சடங்கு. இப்படிச் செய்தால்தான் சாஸ்திர சம்மதம், என்ற வரையறை இந்து மத சாஸ்திரங்கள் எதிலும் இருப்பதாகத் தெரியவில்லை.

அத்தகைய வரையறை ஏதாவது இருக்குமானால் ஆரியர்கள் திருமணத்தை 8 வகை என்று பிரித்திருக்க முடியாது.

துஷ்யந்தன்—சகுந்தலை

அருச்சனன்—சித்திராங்கதை

வீமன் இடும்பி

கிருஷ்ணன் - ருக்மணி

இவர்களுடைய திருமணங்கள், எந்த சாஸ்திர புரோகித சடங்குகளுடன் நடந்தன? ஒன்றுமில்லை. இவைகள், புரோகிதமின்றி நடந்த திருமணங்களாக இருந்தும், கண்ணுவர் முதலிய சிறந்த புரோகிதர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

உண்மை நிலை இவ்வாறிருக்க, தமிழகத்தில் இன்னும் சில வைதிகர்கள், தம்மை வேதசாத்திர வித்தர்களாக எண்ணிக் கொண்டு 'புரோகிதர் இல்லாமல் திருமணமா? பொறுக்குமா கடவுளுக்கு?' என்று புகைகக்குகின்றனர்.

அரசாங்கமோ, தமிழுக்காக, தமிழருக்காக, தமிழ் நாட்டுக்காக ஆட்சி புரிவதாகச் சொல்லிகொண்டு 'புரோகிதம் இல்லாத திருமணங்கள் பதிவு செய்யப்பட்டாலன்றி செல்லுபடியாகாது' என்று குருட்டுத்தனமாகச் சட்டம் இயற்றி வைத்துக் கொண்டு இருக்கிறது.

'ஒன்று, அரசாங்க அலுவலர் முன்னிலையில்-அல்லது-பார்ப்பனப் புரோகிதர் முன்னிலையில் திருமணம் செய்ய வேண்டும்-இல்லா விட்டால் செல்லாது!' என்ற சட்டம், தமிழுக்கும், தமிழனுக்கும், பகுத்தறிவுக்கும் ஏன்? ஆரிய வேதபுராண சாஸ்திரங்களுக்கும் கூட அவமானமாக இலங்குகிறது.

இதனை, அரசியலார் கவனிப்பார்களா?

அருப்புக்கோட்டை :
எம். எஸ். இராமசாமி.

நக்கீரர் கழகம். சென்னை.
புலவர்கள் கவிஞர்கள் சுற்றுலா

மேற்படி கழகச் சார்பில் கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெறுவதாகயிருந்த கவிஞர்கள், புலவர்கள் சுற்றுலா ஆகஸ்ட் 20 21 ம் நாட்களில் ''திருப்பாச்சூர், திருவாலங்காடு, பழையனூர்'' முதலிய இடங்களுக்குச் சென்று வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாவில் டாக்டர் மா. இராசமாணிக்கம், பேராசிரியர் மயிலை சிவமுத்து. மயிலை சீனிவேங்கடசாமி, டி. ஏ. வி. நாதன், பி. ஏ., பி. எல்., புலவர் அரசு, வல்லை பாலசுப்பிரமணியம், பி. ஏ., சா. அமீது. எம். ஏ., இராம இராமநாதன், எம். ஏ., பேராசிரியர் நா. சஞ்சீவி, வ. தி. பாலசுப்பிரமணியம், எம். ஏ., அழ. வள்ளியப்பா, சின்னூர் அ. இளங்கோவன், புலவர் முருகவேள், எம். ஏ., எம் ஓ. எல். நாகமுத்தையா, நாரா நாச்சியப்பன், திருவாட்டிகள் வ. பா. தாமரைக்கன்னி அம்மாள், ஆர். எஸ். பங்கயச்செல்வி. எஸ். இராஜலட்சுமி, எம். ஏ. அனசூயா மோகனசுந்தரம், தாட்சாயணி, எம். ஏ. ஆகியவர்களும் மற்றும் பல அறிஞர்களும் கலந்துகொள்வர்.

சுற்றுலா ஆகஸ்ட் 20 ம் நாள் ஞாயிறு மாலை 3 மணிக்குச் சரியாக சென்னை ஒய். எம். சி. ஏ. கட்டட முன்பிருந்து புறப்பட்டு 21 ம் நாட் மாலை 5 மணிக்குச் சென்னை வந்து சேரும். மற்றபடி எல்லா ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றது. விவரம், செயலாளர் நக்கீரர் கழகம், ''தமிழகம்'' 27, கொண்டலையர் தெரு, சென்னை-1. என்ற முகவரிக்கு எழுதவும்.

முகவரிகள் :—

அருப்புக்கோட்டை
எம். எஸ். இராமசாமி
கண்ணதாசன் புரொடக்சன்ஸ்
1-வது மெயின் ரோடு
சி. ஐ. டி. காலனி
மைலாப்பூர்
சென்னை-4.

பி. சி. கணேசன்
தேளிகுளம் சந்து
நாகைரோடு
திருத்துறைப் பூண்டி

கூடலரசன்
3. கமாண்டிங் ஆபீசர் தெரு-2
மேலமாசி வீதி மதுரை-4.

ஏஜண்டுகள் தேவை
ரத்னு சுகபேதி அல்வா
(FRUIT-LAX)
பெரியோர்கள் முதல் குழந்தைகள் வரை சாப்பிடக் கூடியது. (இனிப்புள்ளது).
மாதிரி சாம்பில் இலவசம்.
விபரத்துக்கு
சம்பு இண்டஸ்ரீஸ், சேலம்-2.

இலக்கியச் சுவை !

[இலக்கியம் என்றாலே பலருக்குப் பாகற்காய் போலவும், சிலருக்குத் தீங்கனி போலவும் தெரிகின்றது. படித்து இன்புறும் பேறுபெற்றவர்கள் பாராட்டிற்கு உரியவர்கள். படித்து இன்புற்று 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று எடுத்துரைக்கும் இயல்புடையோர் வாழ்த்துக் குரியவர்கள். அவர்தம் அரிய செய்திகளைத் தாங்கி வரும் பேழைகள் பேணற்குரியன. இலக்கிய இன்பம் உய்த்துணர்ந்து பெறக் கூடியதாகும் இலக்கியச்சுவை மூலம் 'தென்றலை'த் தீண்டுவோர் அந்த இன்பம் பெறுதற்கே இப்பகுதி தொடங்கப் பெற்றுள்ளது]

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற உயரிய கருத்தை உள்ளடக்கிய சமுதாயம் தமிழ்ச் சமுதாயம். அவ்வாறுள்ள வாழ்வில் அரிய உண்மைகளை ஆய்ந்தறிந்து அறிவிப்போர் அறிஞர் எனப் பாராட்டப் படுகின்றனர். அரிய கருத்துக்கள் மெருகோடு புலவர் வழி தோன்றுமாயின் அவை பண்பின் விளக்கமாய் இலங்கும். பண்பாடு' என்பது வாழ்வியலின் வெற்றி விளக்கமேயாகும். அது பண்பட்ட உள்ளங்கள் மட்டுமே உணர்த்த முடியும். அத்தகைய அருமையான கருத்துக்களடங்கிய பேழைதான் சங்க இலக்கியம். சங்கம் தரும் தங்கப் பேழையிற்றான் தமிழன் தட்டிழ ஏய்-தன்னுட்சிஉடையவனுய் ஒளிர்கின்குன. அப்பேழையில் ஆங்காங்கு அருமையாகக் கூறப்போகிறேன்.

கொடுத்தாரப் போற்றிக் கொடாதார் பழிக்கப்பட்ட காலம் அது. இன்றோ கொடாதார்மட்டுமல்ல கொடுப்போரும் பழிக்கப் படுகின்றனர் ஒருவரது அன்பைப்பெற, பிறிதொருவரைப் புறம்பேசும் புல்லறிவாளர் பெருகிவிட்ட காலமல்ல, சங்க காலம். கொடுத்தவன் என்பதற்காக மட்டும் இல்லாதனவற்றை எடுத்துக் கூறிப் பாராட்டைப் பெருர். கொடுத்ததற்குக்கூலி என்ன என்று எதிர்பாராமல், பொருள் கொடுத்தோமே, ஒரு முதற்பக்க விளம்பரமோ, நிழற்படமோ இல்லையா என்று எண்ணுமல்-இரந்தோருக்கு ஈந்து இன்பம் பெற்ற காலம் அது. சங்க காலத்தில் 'ஈதல்' என்பதே தனிப் பொருளோடு விளங்கி இருத்தல் வேண்டும். திருவள்ளுவரும்

"ஈதல் இசைபட
வாழ்தல் அஃதல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு"

—என்ருர்.

எங்கோ வாழ்வுதேடி வரண்ட நிலையில் - வயிற்றுக்கு வழி தேடிய நிலையில் வாய்ப்பைக் காட்டி வளத்தை ஊட்டி வழி காட்டியவர்கள் உயிருக்கு ஒப்பானவர்கள். ஏறி வந்த ஏணியை உதறித் தள்ளி உப்பரிகையின் இன்பத்தைத் துய்த்து இறந்த காலத்தை எண்ணிப் பாராதவர்கள் இரக்கமற்றவர்கள், இவர்களை எண்ணிக் கழிப்பதைவிட எண்ணுமலேயே இருத்தல் நன்று. இங்கு "ஈதல்" என்பது பொருளையோ, உணவையோ—இல்லாத, பசிக்கின்ற உயிர்க்குக் கொடு என்றகருத்தில் கையாளப்பட்டிருக்குமா? என்பதே ஐயம்.

திருவள்ளுவரே பிறிதோரிடத்தில் கூறியிருக்கிருர்:-

'இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'

உன்னை உணவும், உடுக்க உடையும், இருக்கஇல்லும் கடவுள் தருவார் என்று கருதாதே! இது உன்னை ஆளும் அரசு தரவேண்டியவை என்ற கருத்தையே இடைக்கக் கொண்டு கூறினுர் எனலாம். உணவும்-உடையும்-உறையுளும் இறைவனே எடுத்தளிப்பின் ஏனிந்த அரசு? ஏனிந்த அமைச்சர்கள்? என்ற வினுக்கள் எழும். எனவே தம் நாட்டு மக்களுக்குத் தக்க வாழ்வளிக்கும் பொறுப்பு தகுதியுடைய அரசுக்கே உரியது என்று வள்ளுவர் கருதிக் கூறியிருக்கலாம்.

அப்படியாயின் 'ஈதல்' என்ற செயல் நிகழாதே? என ஐயுறலாம். பெரும் பணம் திரட்டிச் சிலருக்குக் கொடுப்பதை 'ஈதல்' என்ருலே, தம்மிடம் என்றும்-எக்காலத்தும் எடுக்க, எடுக்கக் குறையாத செல்வம் ஒன்றை வேண்டி நிற்பாருக்குக் கொடுப்பதையே குறிக்கும். அப்படிப்பட்ட "செல்வம்" என்ன பொருள்? பணத்தையே விடையாகக் கொண்டு பார்த்தால் ஓர் இலட்சம் கொடுத்து விட்டால் எஞ்சிய தொகை என்ன என்று குறைவு தென்படும். அழிவுத் தன்மையுடைய எப்பொருளும் எடுக்க, எடுக்கக் குறையத்தானே செய்யும். அப்படியாயின் அழியாப் பெரும் பொருள் யாது? அதுவும் திருவள்ளுவர் கருத்துப்படி "செல்வத்துட் செல்வம் கல்வி" என்ருர். கல்விச் செல்வம் ஒன்றுதான் கேட்போர்-கற்போர்-விழைவோர் அனைவருக்கும் ஈதல் சாலும். அவ்வாறு இன்று கொடுத்து விட்டோமே நாளை? என்ற எண்ணம் "கல்விச் செல்வம்" பெற்ருர் மாட்டு இல்லை. இதனையே திருவள்ளுவப் பெருந்தகை 'ஈதல்' வேண்டும் என்றும். அதன் பயனுக வருகின்ற 'இசையை' [புகழை]ப் பெற்று வாழ்தல் வேண்டும் என்றும் வலியுறுத்திக் காட்டியுள்ளார்.

இதனை எண்ணிப் பார்க்க வேண்டும். பணம் கொடுத்து நட்பை இழப்பதைவிட நட்புக் கொள்ளாமலிருத்தல் நன்று' என்ற பழமொழிக் கருத்தும் கல்வியையே இரப்போருக்குக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தைத் தூண்டுகிறது. பொருட் செல்வம் பெற்றவர்கள் விலைபெற்ற வண்டிகளில் செல்லலாம்; உயர்ந்த ஆடைகளை அணியலாம்; உப்பரிகையில் உலவலாம். ஆனல் 'உள்ளத்தெளிவு' பெற முடியாது. கல்விச் செல்வம் பெற்ருேருக்கு 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' (நண்பர்) ஆவர். இந்தக் கருத்தும் பொருட் செல்வத்தை ஈதலை வலியுறுத்துவதில்லை;

எனவே அறிவுச் செல்வத்தைக் குறைவறப் பெற்ற பெரியோர் அள்ளி அள்ளித் தருவதையே 'ஈதல்' என்றும் அவ்வாறு பெற்ற செல்வத்தால் பேறு பெற்று விளங்குவதைக்கொண்டு வரும் பெருமையை 'இசை' என்றும் கூறுவது பொருந்துமன்ருே!

அத்தகைய கல்விச் செல்வம் கவினுறப் பெற்ற புலவர் பெருமக்கள் பலர் வாழ்ந்த நாடு தமிழ்நாடு. அவரால் புனையப் பெற்ற பாக்கள் ஒவ்வொன்றும் மக்களின் மனப் மனப்பண்பிற்கேற்ப அமைந்துள்ளமை படித்து இன்புறத்தக்கதாகும். கல்வி நலம் பெறுதலையே வாழ்வின் குறிக்கோள் என்று மக்கள் வாழ்ந்தனர். வாழ்வின் உச்சியில் வளமெலாம் பெற்று உயர்ந்த தமிழ்ச் சமுதாயத்தின் கண்ணுடியே சங்க இலக்கியமாகும். சங்கத்துச் சான்ருேர்கள் காட்டிய வழிகளின் மூலம் எதிர் காலத் தமிழ்ச் சமுதாயம் ஏறுநடைபோட வேண்டும். எத்தகைய எதிர்ப்புவரினும் எதிர் நீச்சலிட்டுத் தமிழ் மொழியும்—தமிழ் நாடும் தனித்தியங்குதற்குச் சங்க இலக்கியச்சுவை பயன் தருமென்று நம்புகின்றேன்.

அடுத்த கிழமை: 'குறள் நெறி'.

ருக்மணி-இராமனுதன் பி. எஸ்ஸி.

"சாவின் சந்திப்பு" தொடர்ச்சி

இனத்தையே பொசுக்கிவிடுவேன் நான்" என்று பயங்கர சப்தமிட்டான். அவனை தட்டிக்கொடுத்த தாடிப் பெரியார், "நீ உலகை வெறுத்த காரணமென்ன ?" என்று கேட்டார். வாலிபன் வாய் திறந்தான்.

x x x

சேப்பாக்கம் ஆபீசொன்றில் சூபர்வைசராக வேலை பார்ப்பவனே நான். புரசவாக்கத்தில் உறவினர் வீட்டிலே தங்கியிருந்த நான் பஸ்ஸிலே ஆபீஸ் வந்து போய்க்கொண்டிருந்தேன். அந்த பஸ்ஸிலே ஒரு காலேஜ் பாவை! பார்த்தாள் - பார்த்தேன் ! அன்றிலிருந்து காதல் இலக்கியம் எழுதினேம்-வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்தோம் !

நான் ஆபீசில் சூபர்வைசர் ! அவள் நேஷனல் காலேஜில் கணிதநூல் விரிவுரையாளர் !

பணத்திற்குக் கவலையில்லை - அன்பிற்கும் குறைச்சலில்லை சுகத்திற்கும் அளவேஇல்லை !

ஆனல்...இடையில் வந்தான், அவள் காலேஜ் சயன்ஸ் லெக்சரர் சேகரன் - அவளுடைய நண்பனுக ! அடிக்கடி வீட்டுக்கு வந்தான். என்னேடும் அவளோடும் சரளமாக உரையாடினன். எனக்கு அவன் மேல் சந்தேகமில்லை. பொழுதுபோக அவன் சந்திப்பும் பேச்சும் எனக்குத் துணை செய்தன என்ருலும் அன்றொரு நாள்...

காலேஜ் சார்பில் (சுற்றுலா) பிக்னிக்காக மகாபலிபுரம் போயிருந்த மனைவி இன் முகத்தோடு திரும்பிவந்தாள். அவளை வரவேற்ற நான், "போட்டோ காமிரா எடுத்துச் சென்ருயே. என்னென்ன படம் பிடித்தாய் ?" என்று ஆவலோடு கேட்டேன். உடனே அவள், 'இதோ ரதம், -இதோ சிலை- இதோ வாயில்" என்று பல படங்களைக் காட்டிக் கொண்டு வந்தாள். அதிலே ஒரு படம்-ஒரு... படம் ! அதைப் பார்த்தவுடன் நெஞ்சு கொதித்தது. உடல் அனலாய் தகித்தது.

"என்ன படம் இது ?" என்று சத்தமிட்டுக் கேட்டேன் அதற்கவள் கேலிச்சிரிப்பை வரவழைத்துக் கொண்டே, "தெரியவில்லையா ? நானும் நண்பர் சேகரனும்" என்ருள். சொன்னதுதான் தாமதம் "தெரிந்துவிட்டதடி உன் நீலித்தனம் கணவனை வீட்டில் வைத்துவிட்டு கள்ளக் காதலனேடு மகாபலிபுரத்துக் கடற்கரையில் கைகோர்த்துக் கொண்டு படமா எடுத்து வந்திருக்கிருய்? பாவி-பாதகி என் கண்முன் நில்லாதே. ஆபீஸ் போய் வருவதற்குள் உன்னருமைக் காதலனிடம் ஓடிவிடு என் வீட்டிலிருந்தால் கொன்று விடுவேன்" என்று பஸ்ஸில் ஏறினேன்.

ஆபீஸில் பேனுவும் ஓடவில்லை மனமும் ஓடவில்லை. என்னையுமறியாமல் கண்ணீர் வந்தது. மனைவி இப்படிச் செய்துவிட்டாளே என்று இதயம் துடித்தது. மதியம் லீவு போட்டுவிட்டு வீட்டுக்கு வந்தேன் அங்கே ... அங்கே ...விஷத்தைக் சாப்பிட்டுச் செத்துக் கிடந்தாள் என் அல்லி ! ஒன்றுமே புரியாமல் அவளைக் கட்டிப் பிடித்துத் தூக்கினேன். கடிதம் ஒன்று கண்ணுக்குமுன்னல் விழுந்தது.

" அத்தான், நட்புக்கும் காதலுக்கும் வித்தியாசம்தெரியாமல் என்னைச் சந்தேகப்பட்டு விரட்டுகிறீர்கள். இந்த வீட்டை விட்டுப் போ என்று விரட்டியடிக்கிறீர்கள். என்ன செய்வேன் ? பரந்த உலகமே எனக்கு உங்கள் பாதார விந்தந்தான. அதைத் தொட்டுத் தொழுது வாழ உரிமையிழந்த எனக்கு இந்த உலகம் எதற்கு ? வாழ்வு எனனத்திற்கு ? கற்புத் தவருதவள தங்கள் அல்லி என்பதை மெய்ப்பிக்க என் இறப்பாவது சான்ருகட்டும் வருகிறேன் " என்று எழுதியிருந்தாள். அந்த எழுத்தையும் அவள் வெளிறிய கழுத்தையும் பார்த்துப் பதறினேன் உலகமே இடிந்து மண்ணே பிளந்து பிரளயமானதுபோலொரு பிரமையால் துடித்தேன். இன்றும் துடிக்கிறேன். ஐயா பெரியவரே, இல்லாத உறவைச் சொல்லி இல்லக் கிழத்தியைக் கொன்ற நான் பாவி ! மாபாவி! அதற்கு பிராயச்சித்தந்தேடித்தான் கடலலைகளை முத்தமிட வந்தேன். முதியவரே, பெண்கள் காமப்பிசாசுகளல்ல-கற்பரசிகள் ! உணர்ச்சிப் பிண்டங்களல்ல-தாய்மையின் உருவங்கள் !

x x x

இளைஞன் பேசி முடித்தபோது கிழவனுர் நெற்றியைப் பல கோணமாக்கி நேர்பார்வை பார்த்தார். அந்தப் பார்வையிலே, "பெண்கள் எல்லோரும் கெட்டவர்கள் இல்லையா ?" என்ற ஆச்சரியக்குறிபடர்ந்திருந்தது. முதியவரை இளைஞன் ஓரக்கண்ணுல் பார்த்தான். அந்தப் பார்வையிலே, 'பெண் இனமே கற்பின் சாயலாகும்" என்ற தெளிந்த முடிவு விரிந்திருந்தது.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டால் என்ன முடிவு செய்தார்களோ ? யாமறியோம் ! இருவரும் கைகோர்த்தனர் - கட்டிப் பிடித்துத் தழுவினர். அதன்பின் நடந்தனர். நடந்துகொண்டே இருந்தனர்

கடல்நோக்கியா ? இல்லை. திருவல்லிக்கேணி பைகிராப்ஸ் ரோட்டை நோக்கி !

16. மீனாட்சி திருக்குணங்கள்

"அம்மா! உங்கள் அண்ணன் மகன் உங்கள் பேச்சைக் கேட்காமலா இருப்பார்? உங்கள் மேல் அவருக்கு அளவில்லாத அன்புண்டாமே! இப்போது கூட அந்தச் சினிமாக்காரியின் தொந்தரவுக்குப் பயந்து அவர் இங்கே உங்கள் வீட்டில் தானாமே பல நாட்களாக இருந்து வருகிறார். அம்மா! நீங்கள் நல்லாயிருப்பீர்கள். என்னை உங்களுடைய இன்னொரு மகளாகப் பாவித்து அவருக்குப் புத்திமதி சொல்லி என்னுடன் சேர்ந்து வாழ வைக்க வேண்டும். உங்கள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இப்போதே என் வாழ்க்கையில் ஏழெட்டு ஆண்டுகள் வெறும் பாலைவனமாகக் கழித்து விட்டன." என்று கூறிக் கண்ணீர் விட்டாள் அந்தப் பெண்.

"நீ என்ன சொல்கிறாய்? எனக்கொன்றும் புரியவில்லையே!" என்று மரகத அம்மாள் குழம்பினாள்.

"அம்மா! உங்கள் கூடப் பிறந்த அண்ணன் வீட்டு மருமகள்தான் நான். என்னை என் கணவருடன் சேர்த்து வாழவைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. அது உங்களால் முடியும்—உங்கள் ஒருவரால்தான் முடியும்!" என்று மரகத அம்மாளின் கையைப் பிடித்துக் கொண்டாள் அந்தப் பெண்.

"என்ன? உண்மையாகவா? நீ சுந்தரேசன் மனைவியா? நீ திருமணமாகி ஆறாவது மாதத்திலேயே இறந்து போய் விட்டாய் என்றல்லவா சொன்னான்?" என்று தன் சந்தேகத்தை வெளிப் படையாகவே கேட்டாள் மரகத அம்மாள்.

இதைக் கேட்ட அந்தப் பெண், "ஆ! அப்படியா சொன்னார்?" என்று கேட்டுவிட்டுக் கோவென்று கூவி யழத்தொடங்கி விட்டாள்.

அவள் தன் அத்தான் சுந்தரேசன் மனைவி என்பதை அப்போது தான் அறிந்துகொண்ட தங்கத்திற்கு ஒரே அதிர்ச்சியா யிருந்தது. அந்த அதிர்ச்சி தாங்க மாட்டாமல் அவள் சுவரின் மேல் சாய்ந்து கொண்டு. அந்தப் பெண்ணையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணைப் பார்க்கப் பார்க்க அவளுடைய மனச் சுழற்சியின் வேகம் அதிகரித்துக் கொண்டே போயிற்று!

அண்ணாமலைப் பண்டிதர் தக்க சமயத்தில் தன்னை எச்சரிக்க முன் வந்திருக்கிறார் என்பது அவளுக்கு அப்போது தான் புலப்பட்டது. தான் படுகுழியில் வீழ்ந்து பாழாகி விடாமல் காக்கவே அவர் நேரம் பார்த்துத் தன்னிடம் விஷயத்தைக் கூற வந்திருக்கிறார் என்று அவளுக்குத் தோன்றியது. இருந்தாலும், அத்தான் சுந்தரேசன் மீது அவளுக் கேற்பட்டிருந்த பற்று உடனடியாக விலகி விடக் கூடியதாக இல்லை. அது மட்டுமல்லாமல், அது அவள் மனோ சிந்தனையை வேறு பாதையில் திருப்பி விடக் கூடிய சக்தி வாய்ந்ததாகவு மிருந்தது.

ஒருவேளை அண்ணாமலைப் பண்டிதருக்கு சுந்தரேசன் மீதுள்ள வெறுப்புக் காரணமாக அவர் தன்னிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி யிருக்கலாமென்றும், அது மட்டுமல்லாமல் தன் சொல்லை மெய்ப்பிப்பதற்காக அவர் இந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்து தன் அத்தானின் மனைவியாக நடிக்கச் செய்திருக்கலாம் என்றும் ஓர் எண்ணம் கூட அவளுக்கு இடையே ஏற்பட்டது. ஆனால், அந்த எண்ணம் நிலைபெற்றிருக்க வில்லை. அண்ணாமலைப் பண்டிதரின் பெரிய மனிதத் தன்மையும் பண்பும் அவள் இப்போது பல நாட்களாக நேரடியாகக் கண்டறிந்து வருகின்றபடியால். அவரை அவ்வளவு கீழ்த்தரமாகக் கருத அவளால் முடியவில்லை. அதுவுமில்லாமல் கண்ணீரும் கம்பலையுமாகத் தன் தாயின் காலடியில் வீழ்த்து கதறுகின்ற அந்தப் புதிய பெண்ணின் கூற்றை வெறும் நாடகம்—நடிப்பு என்று அவ்வளவு எளிதாகச் சொல்லிவிடக் கூடியதாக இல்லை,

மேலும் அவள் யோசித்துப் பார்க்கின்ற பொழுது சற்று முன் சுந்தரேசன் தன்னிடம் நடந்துகொண்ட முறை அவள் அவன் மீது கொண்டிருந்த மதிப்பை மேலும் குறைப்பதாகவே யிருந்தது. சுந்தரேசன் சொல்லுவதெல்லாம் சுத்தப் பொய்யாக இருக்குமோ என்றுதான் தோன்றியது.

தங்கத்தின் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு முறை சுந்தரேசன், வெறுப்புக்குரிய உருவமாகத் தோற்றமளித்தான். மற்றொரு முறை சுந்தரேசன் விரும்புதற்குரியவனாகத் தோன்றினான். அவன் இல்லாவிட்டால் தனக்கு வாழ்வில்லை என்று ஒரு கணம் அவளுக்குத் தோன்றியது அவனோடு வாழும் நாளெல்லாம் கசப்பான நாட்களாகவே இருக்குமோ என்ற ஒருபயம் அவளுக்கு ஒரு கணம் தோன்றியது.

அண்ணாமலைப் பண்டிதருக்குச் சுந்தரேசன்மேல் ஏன் இவ்வளவு கோபமோ-ஏன் இவ்வளவு வெறுப்போ தெரியவில்லை, அண்ணாமலைப் பண்டிதரும் சுந்தரேசனும் ஒருவரைப் பற்றி ஒருவர் கூறிய கருத்துக்களைப் பார்த்தால் இருவருக்கும் எத்தனையோ ஆண்டுகளாகப் பகையிருக்கும்போல் தோன்றியது. யார் கூறுவது உண்மை யார் கூறுவது பொய் என்று எளிதாகச் சட்டென்று கண்டுபிடிக்க முடியாது போலிருந்தது. ஆனால், சுந்தரேசன் குணம் அவளுக்குச் சின்ன வயது முதலே தெரியும் ஆகையாலும், அண்ணாமலைப் பண்டிதரைப் பற்றியும் அவளுக்கு மேலான கருத்து ஏற்பட்டிருந்தபடியாலும் அவள் சுந்தரேசனைப் பற்றி-அவன் ஒழுக்கத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வர முடிந்தது. ஆனால்,

அவளுடைய மனத்தின் ஒருபகுதி அந்த முடிவை ஏற்றுக்கொள்ளத் தயங்கியது. என்ன இருந்தாலும் அவன் குற்றவாளி என்று அது ஒப்புக்கொள்ள மறுத்தது!

இதோ எதிரில் இருக்கும் பெண்ணின் கண்ணீரைக் கண்ட பிறகுகூட, "என் வாழ்வு பாலைவனமாகிவிட்டது அதைச் சோலைவனமாக்க ஒரு வழி சொல்லுங்கள்" என்று தன் தாயின் காலடியில் விழுந்து கதறுகின்ற அந்தப் பெண்ணின் பரிதாபத் தோற்றத்தைக் கண்ட பிறகுங்கூட, திருமணம் நடந்த ஆறு மாதங்களிலேயே செத்துப்போய் விட்டாள் என் மனைவி என்று அத்தான் சுந்தரேசன் கூறியிருக்க-இல்லை, அவர் கொடுமையால் விரட்டியடிக்கப்பட்டு நடைப்பிணமாக வாழ்ந்து வருகிறேன் என்று சோக உருவோடு வந்து நிற்கும் அந்த வாடியுலர்ந்த கொடிபோன்ற பெண்மணியைக் கண்ட பிறகும்கூட அவளால் தன் அத்தானை அலட்சியப் படுத்திவிட முடியவில்லை அவ்வளவு தூரத்திற்குச் சுந்தரேசன் அவள் இதயத்தில் இடம் பிடித்திருந்தான். இருந்தாலும் அவள் இனிமேல் அவனை மறந்துவிட வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்தாள். எத்தனைதான் தன் இதயத்தைக் கவர்ந்தவனாயிருந்த போதிலும், எத்தனைதான் தன்னால் அவனின்றி வாழமுடியாது என்ற நிலையிருந்தபோதிலும், இன்னொரு பெண், அவனுக்கு வாழ்க்கைப்பட்ட தன் காரணமாகத் தன் வாழ்வை வீண் ஆக்குவதை அவள் விரும்பவில்லை. அந்தப் பெண்ணின் வாழ்வைக் கடைத்தேற்றவேண்டியது தன் பொறுப்பு என்று அவளுக்குத் தோன்றியது வாழ்க்கைப்படாத ஒரு பெண்ணாக அவள் இருந்திருந்தால், தன்னைப்போலவே சுந்தரேசனைக் காதலிக்கிறவளாக அவள் இருந்திருந்தால், தங்கம், அவள் மீது போட்டியுணர்ச்சியும் பொறாமையும் தான் கொண்டிருப்பாள். ஆனால், அவள் அவனைக் கணவனென்று கைப்பிடித்தபின் - அவன் அவளுக்கே உரியவன் என்ற எண்ணம் தங்கத்திற்கு ஏற்பட்டது. பத்தாண்டுகளாக - மணம் புரிந்தும் வாழ்வில்லாத நிலையில் வாடித் தவிக்கின்ற அந்தப் பெண்ணுக்குப் புதுவாழ்வு அளிக்கவேண்டியது தன் கடமை என்று தங்கம் உணர்ந்தாள். இத்தனை எண்ணங்களும் தன் இதயத்திலே எழுந்து எழுந்து தோன்றத் தங்கம் சுந்தரேசனைத் தன் காதலனாக இனி எண்ணுவதில்லை என்ற முடிவுக்கு வந்தாள். அப்படி முடிவுக்கு வந்தபோதும்கூட அவள் தான் எப்படி இந்த முடிவை நடைமுறையில் கையாளுவது என்று புரியாமல் திண்டாடினாள். சுந்தரேசனுடைய அழகிய புன்னகையரும்பிய முகத்தை மனத்தால் எண்ணிப் பார்க்கும்போது கூட அவளுக்குத் தன்னால் அவனை ஒதுக்கிவிட்டு இருந்துவிட முடியாதென்றுதான் பட்டது. ஆனால். ஓர் அபலைப் பெண்ணின் வாழ்வு பாழாகப் போவதற்குத் தான் காரணமாக இருக்கக்கூடாதென்று அவள் உறுதி பூண்டாள்.

அதுவரையிலும் அந்தப் பெண்ணையே உற்றுநோக்கிக்கொண்டிருந்த தங்கம், திடீரென்று அந்தப் பெண்ணின் கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு. 'நான் உங்களுக்கு உதவி செய்வேன். அத்தானை நான் உங்களிடம் சேர்த்துவைப்பேன்" என்று உறுதியான குரலில் கூறினாள்.

தன் மகளின் இந்தத் திடீர்ச் செயலைக் கண்டு மரகத அம்மாள் அதிசயப்பட்டுப்போனாள்.

"அம்மா, சற்று முன்னால்தான் அத்தான் தோட்டத்திற்கு வந்திருந்தார். அவர் இப்போது ஏதோ பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாராம். இரண்டாயிரம் ரூபாய் இருந்தால் அதிலிருந்து தப்பிக்க முடியும் என்று சொன்னார். தங்கம் உன்னால் உதவி செய்ய முடியுமா? என்று கேட்டார்" என்றாள் தங்கம். அதற்கு மேல் பேசிய விவரங்களை அவள் சொல்லத் துணியவில்லை.

"எங்கே அவர்? இப்போது இங்கே தான் இருக்கிறாரா?" என்று அந்தப் புதிய பெண் ஆவலோடு கேட்டாள்.

'இல்லை, பேசிக்கொண்டேயிருந்தார். திடீரென்று புறப்பட்டு விட்டார். என்ன காரணமோ தெரியவில்லை. என்னால் உதவி செய்ய முடியவில்லை. என்ற கோபமோ என்னவோ?" என்று தங்கம் கூறினாள்.

"ஆ! இல்லை. உன்மேல் அவர் கோபம் கொண்டு போகவில்லை, நான் வீட்டுக்குள் வந்ததை அவர் கவனித்திருக்க வேண்டும். அதனால் தான் திடீரென்று போயிருக்கிறார்" என்று விளக்கம் சொன்னாள் அந்தப் பெண். தொடர்ந்து அவள், "அந்தக் சினிமாக்காரிக்கு அள்ளிக் கொட்டுவதற்காகத்தான் அவர் ரூபாய் தேடிக் கொண்டிருக்க வேண்டும். அப்படி மட்டும் இல்லாமல் வேறு ஏதாவது ஆபத்தில் அவர் சிக்கிக் கொண்டிருந்தால், நான் நிச்சயம் என்னிடம் மிகுந்துள்ள நகைகளையாவது விற்றுக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்." என்றாள்.

"மீனாட்சி, நீ நினைப்பது சரிதான். அவன் அந்தச் சினிமாக்காரிக்காகத்தான் பணத்துக்கு அலைகிறான்' என்று மாடிப் பக்கம் இருந்து ஒரு குரல் வந்தது. பெண்கள் மூன்று பேரும் திரும்பிப் பார்த்தார்கள்

அண்ணாமலைப் பண்டிதர் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார். அவரை முன்பின் பார்த்தறியாத அந்தப் பெண், அவர் தன்னைப் பெயரிட்டு அழைத்துக் கொண்டு வந்ததையும், தன் கணவனைப் பற்றி அவ்வளவு உறுதியான தகவல் தெரிவிப்பதையும் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

அண்ணாமலைப் பண்டிதருக்குத் தெரியாத விஷயமே இருக்காதோ என்று மரகதமும் தங்கமும் ஆச்சரியப் பட்டார்கள்.

"தங்கம், சுந்தரேசனைப் பற்றி நான் சொல்லிய விஷயங்கள் உண்மையென்று மெய்ப்பிக்கிறேன் என்று முன் உன்னிடம் சொல்லியது நினைவிருக்கிறதல்லவா? இதோபார், இந்த மீனாட்சி தான் அவனுடைய மனைவி." என்று சொன்னார் அண்ணாமலைப் பண்டிதர்.

அவருடைய பேச்சைக் கேட்டு மரகதம்மாள் மலைத்துப் போனாள். தங்கத்துக்குச் சுந்தரேசனைப் பற்றி ஏன்—எதை மெய்ப்பிக்க விரும்புகிறார் என்று எண்ணி அவள் குழம்பினாள். அந்தக் குழப்பம் ஏற்பட்டு அவள் மனம் கலங்கித் தெளிவடைந்தபோது அவளுக்கு விஷயம் விளங்கத் தொடங்கியது. அதாவது தான் இது வரை தங்கத்தைச் சரியாகக் கவனிக்கவில்லை என்பதை அவள் புரிந்து கொண்டாள். தன் கவனத்தை மீறித் தங்கம் சுந்தரேசனிடம் காதல் கொண்டு வந்திருக்கிறாள் என்பதை மரகதம்மாள் யூகித்துணர்ந்து கொண்டாள். அண்ணாமலைப் பண்டிதர், 'இதோ பார் இந்த மீனாட்சிதான் அவனுடைய மனைவி' என்று கூறிய அந்த சொற்றொடர் அவளுக்குப் பலப் பலவற்றைப் புரிய வைத்தது. தங்கம்—சுந்தரேசன் காதல் விவகாரம் எப்படியோ அண்ணாமலைப் பண்டிதருக்குத் தெரிந்து அவர் அதைத் தவிர்க்க முற்பட்டிருக்கிறார் என்ற விவரத்தையும் அது அவளுக்குத் தெளிவாகப் புரிய வைக்காமல் போகவில்லை. எப்படியோ தங்கம் ஒரு பெரிய இக்கட்டிலிருந்து தப்பிவிட்டாள் என்று அவள் மன நிம்மதி யடைந்தாள்.

தனக்கு முன் பின் அறிமுகமில்லாத அந்தப் பெரிய மனிதர் தன்னைப் பற்றியும் தன் கணவனைப் பற்றியும் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருப்பதைக் கண்டு மீனாட்சி என்ற அந்தப் புதிய பெண்ணும் மிக வியப் படைந்தாள். அண்ணாமலைப் பண்டிதர் படியை விட்டுக் கீழே இறங்கி வந்ததும் மீனாட்சி எழுந்து சென்று அவர் காலடியில் விழுந்து "நீங்கள் தான் என்னை வாழவைக்க வேண்டும்!" என்று வேண்டிக்கொண்டாள்.

"பல நாட்களாக நான் அதற்காகத் தான் முயன்று கொண்டிருக்கிறேன். எதற்கும் காலம் வரவேண்டுமல்லவா? பொறுத்திரு!" என்று பெரிய ஞானவானைப்போல் பதிலளித்தார் பண்டிதர்.

அதன் பிறகு அவர் மரகத அம்மாள் பக்கம் திரும்பி, "மரகதம் இந்தப் பெண்ணை வாழவைக்க வேண்டியது உன் பொறுப்பு. அவள் கணவன் அவனை ஏற்றுக்கொள்ளும்வரை நீதான் அவளைப் பராமரித்துக் காப்பாற்ற வேண்டும் செய்வாயா?" என்று உரிமையுள்ளவர்போல் கூறினார்.

மரகதம்மாள் அவர் பேச்சுக்கு மறுப்புச் சொல்லவில்லை. ஆனால், அவர்களுடைய குடும்பச் செலவு மட்டும் நாளுக்குநாள் அதிகமாகி வருவதையும், கந்தசாமி வாத்தியார் எங்கெங்கோ போய்க் கடன் வாங்கிச் சமாளித்து வருவதையும் அவள் அந்தச் சமயம் எண்ணிப்பாராமல் இல்லை.

மீனாட்சி என்ற அந்தப் பெண்ணும் அவர்கள் வீட்டில் இருக்க ஆரம்பித்த பிறகு, மீனாட்சியும் தங்கமும் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள். பக்கத்து வீட்டு ராதாவும்கூட மீனாட்சியுடன் பழக ஆரம்பித்தாள். ஆனால், பழகப் பழக மீனாட்சியின் குணத்திற்கும், தங்கத்திற்கும்-ஏன் ராதாவிற்கும்கூட ஒத்து வரவில்லை. தங்கம் - சுந்தரேசன் காதல் விவகாரம் ராதாவுக்கோ மீனாட்சிக்கோ தெரியாது. அது ஒரு வகையில் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால், மீனாட்சி தங்கத்தை ஏசுவதற்கு ஒரு தகுந்த காரணம் அவளுக்கு கிடைத்துவிட்டிருக்கும்.

மீனாட்சி எப்பொழுதும் தன் பிறந்த வீட்டுப் பெருமையைப் பற்றியே பேசுவதும், தன் தாய் தந்தையர் தனக்குக் கொடுத்துவந்த செல்லத்தைப் பற்றிப் பெருமையாகக் கூறுவதும், சுந்தரேசனைப் பற்றிப் பற்பலவாறு அவதூறு சொல்வதுமாக இருந்தாள்.

திருமணமான ஆரம்பத்தில் சுந்தரேசன் தான் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டார் என்றும், எப்போதும் தனக்கு அடங்கித்தான் நடப்பார் என்றும், தான் தன் மாமியோடு சண்டை போடும்போதுகூட அவர் தன்னை எதிர்த்துத் தம் தாய் பக்கம் சேரப் பயப்படுவார் என்றும், அப்படிப் பட்டவரை அந்தச் சினிமாக்காரி எப்படியோ வசிய மருந்து போட்டு மயக்கிவிட்டாள் என்றும், தான் அவரோடு கோபமாகப் போய்விட்டதாகவும் அவள் அடிக்கடி தன்னைப் பற்றிப் பேசிக் குறிப்பிடுவாள். அவள் பேச்சுக்களையெல்லாம் கவனித்துவந்த தங்கம், தன் அத்தான் உள்ளபடியே தீயகுணம் பொருந்தியவராயிருந்தபோதிலும், இந்த மீனாட்சியின் குணமும் போக்குமே அவரை மேலும் தூர்த்தராக்க வழி கோலியிருக்க வேண்டும் என்று எண்ணினாள்.



ஆசிரியர் கண்ணதாசன் தலைமையில் காரைக்குடித் திருக்குறள் விழாக் கவியரங்கில் கலந்து கொண்ட கவிஞர்கள்.

கணவன் குறிப்பறிந்து அவன் கருத்துக்கிசைந்து நடந்து வாழ வேண்டியது பெண்களின் கடமை. கணவனே தன் தலைவனெனக்கொண்டு அவன் மனங்கோணாமல் நடந்து அவனைத் தங்கள்மீது பற்றுக்கொள்ளச் செய்து வாழ்வை இன்ப மயமாக்க வேண்டியது பெண்களின் கடமை. அதை விட்டு விட்டு இந்த மீனாட்சி என்ற பெண் தன் கணவன் தன் விருப்பப்படி ஆடினார் என்று பெருமை பேசுவதும், சினிமாக்காரி வசியப்படுத்தி விட்டாள் என்று முகாரி பாடுவதும் தங்கத்திற்குச் சிறிதுகூடப் பிடிக்கவில்லை. நல்ல வேளையாக அவளுக்குத் தான் அவளுடைய கணவன் காதலுக்குப் பாத்திரமான பெண் என்று தெரியவில்லை என்று உள்ளூர மகிழ்ச்சியடைந்தாள் தங்கம். இல்லாவிட்டால், தன்னையும் அந்தச் சினிமாக்காரியின் தரத்தில் வைத்து இந்த மீனாட்சி பேச ஆரம்பித்துவிடக்கூடும் என்று பயந்தாள்.

மனத்துக்கினியவளும் தன்னைப் போலவே கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவளுமான ராதாவுடனேயே இதுநாள்வரை பழகிவந்த தங்கத்திற்கு - இப்போது இந்தப் புதுமாதிரியான போக்குடைய மீனாட்சியுடன் பழகுவது சிரமமாயிருந்தது. வெடுக்வெடுக்கென்று பேசுவதும், எதையும் தவறாகவே புரிந்துகொள்வதும், பிறர் கூறுகின்ற வார்த்தைகளுக்கெல்லாம் புதுப்பொருள் காண்பதும் இப்படியாக எதற்கும் மாறுபாடான தன்மையிலே வாதம் புரிவதுமாக இருந்தாள் அந்த மீனாட்சி.

தங்கம் அவளுடைய போக்குக்கெல்லாம் வளைந்து கொடுத்துக் கொண்டு தான் வந்தாள். தன் வீட்டில் விருந்தாளியாக வந்துள்ள ஒருத்தியுடன் சண்டை பிடித்துக் கொள்ளக் கூடாதென்று தான் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தாழ்ந்து போனாள். மீனாட்சி மேல் தனக்கு உள்ளூர ஏற்பட்டிருந்த வெறுப்பை எல்லாம் எவ்வளவோ கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

ஆனால், ஒருநாள் அவள் அடக்கி வைத்திருந்ததெல்லாம் வெடித்துக் கிளம்பும் படியான நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

மீனாட்சி தங்கத்தைப் பலவாறுபழித்துப் பேசி விட்டு அவர்கள் வீட்டை விட்டுக் கோபமாய் புறப்பட்டுப் போய் விட்டாள். அவள் அவ்வாறு போகும்படி நேர்ந்த நிகழ்ச்சி இதுதான்!

தொடரும்

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்.

பொதுக்குழு, மாவட்ட அமைப்பாளர் குழு கூட்டறிக்கை.

அன்புடையீர்,

வணக்கம். திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு மாவட்ட அமைப்பாளர் குழு கூட்டம் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னிலையில் ஆகஸ்ட் திங்கள் 21-ம் நாள் ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு தி. மா. மு. கழக தலைமை நிலையக்கட்டிடத்தில் (எழிலகம், சிதம்பரம்) நடைபெறும். அதுபோது பொதுக்குழு உறுப்பினர்களும், மாவட்ட அமைப்பாளர்களும் கல்லூரிக்கு ஒரு பிரதிநிதி வீதம் தவறாமல் வந்து கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அன்பன்,
எஸ். டி. சோமசுந்தரம்.
பொதுச்செயலாளர்,
திராவிட மாணவர்
முன்னேற்றக் கழகம்.

குறள் [illegible] கவியரங்கம்

1. திருவள்ளுவர் ஓர் இலக்கிய ஆசான்

—கருப்பட்டிக்கவிராயர்.

கண்ணதாசன் முன்னுரை

கருப்பட்டிக் கவிராயர் வள்ளு வனோர்
களங்கமிலா இலக்கியத்து ஆசான் என்று
பொருட்கொட்டிப் போடஇவண் வருவார்—நீங்கள்
போய்அவரை ஈபோல மொய்த்துக் கொள்க !

தமிழ்த்தாய் வணக்கம்.

எண்ணுகி; எழுத்தாகி; எதுகை, மோனை,
இயலுகின்ற சொல்லாகி; இசைகனிந்த
பண்ணுகிப்; பொருளாகிப்; பதமு மாகி;
பாவாகி; அணியாகிப் பழமை தோன்றும்
விண்ணுகி; எம்மொழியும் வியக்கும் வண்ணம்
விரிதமிழ்நூல் பலவீன்றும் புதுமை காட்டுங்
கன்னுகிக் காலமெலாங் கன்னி ஆனுள்
கஞ்சமலர்ச் சீரடிகள் பணிந்து வாழ்வாம்.

ஆசான் வணக்கம்.

பண்டிதன்காண்; பண்டிதரில் மணியா னுன்காண்
பைந்தமிழும் வடமொழியும் படித்துத் துய்த்தே
உண்டவன்காண்; நூற்கடலை உள்ளந் தோய
உணர்ந்தவன்காண்; கவிநயங்கள் ஓர்ந்து தேர்ந்தே
விண்டவன்காண்; தடைஎழுப்பி விடையும் காட்டி
விரிவுரைகள் தந்தவன்காண்; சொல்லின் ஆழங்
கண்டவன்காண்; மகிபால நகரம் தந்த
கதிரேச ஆசானைப் பணிந்து வாழ்வாம் !

குறள் வணக்கம்.

உலகமகா அறிஞரெலாம் ஒன்ருய்க் கூடி
ஒருருவாய் நின்ருலும் ஒப்பே இல்லான்;
நிலவுபுகழ்த் தமிழகந்தான் நேர்ந்து பெற்ற
நிறைபுலமைப் பெரும்புலவர் நெஞ்சம் எல்லாம்
உலவுகின்ற இருளகற்றி ஒய்வே காணு
ஒளிவீசுநீ திருவிளக்காம் உதய ஞான
திலகனெனும் வள்ளுவன்சொல் தெய்வப் பாவாம்
திருக்குறளின் துறைபுகுந்து திளைத்து வாழ்வாம் !

இலக்கிய ஆசான்

தென்பாண்டி மண்டலத்தின் சிவகெங்கைச் சீமைவளர்
வண்தமிழால் மாலையிட்ட மங்கைதமிழ் கூட்டுறவால்
கவலையில்லா மனிதனெனக் கவிஉலகில் வாழ்கின்ற
நவயுகத்தின் தென்றலென நாடெங்கும் புகழ்பெற்றும்
ஆடுகின்ற அரசியலில் ஆர்க்கின்ற கட்சிதனிற்
பாடுகின்ற படஉலகில் பழிகூறிப் பகைத்தவரும்
உள்ளூறி உளமறக்க உயிர்உருக உடலினிக்கக்
கள்ளூறும் கவிபாடும் கவியரங்கின் நாயகமே !
முறைவகுத்த வள்ளுவனின் முழுவறிவைப் பகுத்தறிவால்
துறைவகுத்துக் கனிதமிழில் சொல்லவந்த கவிமணிகாள் !
பாலூட்டிச் செந்தமிழாம் பசுந்தேனில் குறள்குழைத்துத்
தாலூட்டித் தமிழிசையால் தாலாட்டுந் தாய்க்குலமே !
இறைமணக்குந் தமிழமுதை இருசெவியால் மிகவுண்டு
நிறைபுலமைத் தமிழ்உருவாய் நிறைந்திருக்கும் பெரியோரே !
வாசமுள்ள நெய்தடவி வகுப்பெடுத்து வகைசுருட்டி
நேசமுடன் மயிர்திருத்தி நிதம்பொழுது கழிப்பதல்லால்
காலையிலே பல்உணவும் கடும்பகலில் பேருணவும்
மாலையிலே சிற்றுணவும் வருமிரவிற் சுவை உணவும்
வயிறுப்ப உண்பதல்லால் வண்சுவைசேர் முப்பாலில்
உயிர்வளர்க்க ஒருபாலும் உண்மையிலே உண்டறியேன்
உயிர்திருத்தி அறிவூட்டும் உயராசான் அடிபணிந்து
செயிர்திருத்தும் அவர்நூலாந் திருக்குறளில் ஒன்றுணரேன்
எழுத்தரும்பிச் சொல்மலர்ந்து ஏன்றபொருட் சுவைமுற்றிப்
பழுத்தினிக்கும் கற்பகமாம் பைந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த
இலக்கணங்கள் கண்டறியேன் இலக்கியங்கள் தொட்டறியேன்
கலக்கமுற ஒன்றிரண்டு கண்டவற்றைக் கொண்டிங்கு
புலவனென நின்றவனைப் பூமிக்கே போதகனாய்
இலங்குகின்ற வள்ளுவனை இலக்கியநூல் ஆசானாய்க்
காட்டென்றே இலக்குவனார் கவிஅரங்கில் ஏற்றிவிட்டார்
காட்டுகின்ற வகையறியேன் கவிசமைக்கும் முறையறியேன்
வெண்பாவும் கலிப்பாவும் விளிப்பாவும் விருத்தமெனும்
ஒண்பாவும் பாடுமுறை ஒருசிறிதும் பயின்றறியேன்.
ஐயாதெரி யாதையா இந்தவிதம் நேருமென்று
செய்யப்பா ! உன்ஆணை மெய்யாகச் சொல்கின்றேன்
உய்யப்பா எனஇங்கே ஒருவார்த்தை சொல்லி என்னை
எய்யாமற் காப்பாற்ற இவ்வரங்கில் வாருமய்யா
என்றிட்டேன் என்றவுடன் என்முன்னே வந்தொருவர்
என்னப்பா கவிராயா எனை அழைத்த காரணந்தான்
வல்லானை எமக்கிட்டு வையகத்தில் அழைத்தது மேன் ?
சொல்லப்பா என்றவுடன் சொல்லியவர் யாரென்றேன்
எத்தனையோ நூற்ருண்டாய் இருளகற்றும் ஒளிவிளக்காய்
சித்தரித்துக் கொண்டாடும் சிறப்பெல்லாம் கண்டவர்நீ
என்உருவம் தெரியவில்லை என்குரலைக் கேட்டதில்லை
மன்னுபுகழ்க் குறளீந்த வள்ளுவனும் நாமென்ருன்
ஊனெல்லாம் உருகிவர உயிரெல்லாம் உணர்ந்துவர
தேனெல்லாம் தேனென்றி தேடிவரும் தென்தமிழில்
பன்னூறு குறள்தந்த பாவலனும் நீர்தாமோ ?
என்முன்னோர் சொல்லிவைத்த எழுதிவைத்த வடிவெங்கே ?
நீண்டபெருந் தாடிஎங்கே ? நெளிந்துருளும் சடைஎங்கே ?
பூண்டஒரு நூலெங்கே ? புகலுமய்யா என்றிட்டேன்
எழுதிவைத்த திருக்குறளே எழிலான என்னுருவாம்
முழுவறிவாம் அவ்வுருவை முழுதாகக் காணுமல்
கண்ணற்ற ஒருநால்வர் களிற்றதனைக் கண்டதுபோல்
என்னுடைய படம் எழுதி என்னுருவைச் சிதைத்துவிட்டார்
ஆனதினுல் கவிராயா அறியாது திகைத்தாயோ ?
தேனை என்சொல்லைத் திரித்தெழுதும் வல்லுரையாம்
கைப்பான சுவைசேர்த்துக் கலக்கிவிட்ட காரணத்தால்
செப்புகின்ற மொழிகேட்குஞ் செவியுணர்வை இழந்தாயோ ?
நின்குறட்கு விழாஎடுத்தார் நிகழ்த்துகின்ற கவிரங்கில்
நின்னையுமோர் இலக்கியம்சொல் நேராசான் எனக்காட்டிக்
கவிபாடி வாவென்ருர் கழகத்தின் செயலளார்
கவிக்குலத்தார் கைப்புகுந்த கண்ணிகள்போல் பண்டைஉயர்
இலக்கணத்தைப் பொடியாக்கி இலக்கியத்தை மாவாக்கித்
கலக்கியதைச் சமைத்திறக்கிக் கலைஎன்றும் கவிஎன்றும்
படைத்ததனுல் தமிழகத்தின் பண்பழித்தும் அறிவுக்கே
விடைகொடுக்கும் இலக்கியங்கள் வெளிவந்து நடமாடும்
தூங்கும் குழலாடச் சுற்றிவைத்த மலராட
ஓங்கும் குழையிரண்டும் இருசெவியில் கூத்தாட
வெண்மாவு உடலெங்கும் விரிந்தாட வண்டாடும்
கண்ணிரண்டும் மையாடக் கட்டுடலின் அங்கமெலாம்
வெளிபாட நூண்சேலை மெய்யிற் படிந்தாட
அளிபாடும் பூவாடும் அன்னமென வந்துநிற்கும்
அத்தைபெற்ற இரத்தினத்தை அழகான சோலையிலே
முத்தமிட அன்னவளும் முடுகுகவி நடைபோலச்
சொல்காதற் பேச்சதனைச் சொல்கவியால் நூலாக்கி
மெல்லியலாள் காதலென விரித்துரைக்கும் இலக்கியங்கள்
தாய்ப்பாலைக் குடியாமல் தத்துவந்த புட்டிப்பால்
ஏய்ப்பாகத் தான்குடித்தே இளைத்துவரும் இலக்கியங்கள்
சாகாத தமிழ்மொழியைச் சாகவைக்குந் திவசங்கள்
ஆகாத பேரின்மேல் அறம்பாடும் அனுபந்தம்.
அம்பாஞ்சி அம்மாமி அத்தங்கார் அத்திம்பேர்
அம்மங்காள் மொழிவழியே ஆளுகின்ற பத்திரிகை
இத்தலையும் ஒன்ருக இணைந்தாடும் இந்நாளில்
சித்திரமாய் முன்னோர்கள் செய்துவைத்த முன்நாளின்
நலங்காட்டும் நிறைவாழ்வின் நயங்காட்டும் நல்லதோர்
இலங்கியந்தான் எதுவாகும் எடுத்துரைப்பீர் பெரியீரே !
எனக்கேட்க வள்ளுவனும் என்மகனே கவிராயா
மனம்அமையச் சொல்லுகின்றேன் மனந்திறந்து கேள் என்ருர்
அன்னவரை ஆசானுய் அடிபணிந்தே எழுந்துநின்று
என்னையுநும் மாணுக்கன் எனக்கொள்வீர் என்றுரைத்தேன்
அன்புதவழ் முகமலர அகமலர ஆசிசொல்லி
என்னையுமோர் மாணுக்கன் எனக்கொண்டு பேசுகின்ருன்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்ற நெறிமுறையை
மெய்யாக எந்நாளும் விளக்குகின்ற நூலெல்லாம்
ஏற்றவோர் இலக்கியமாய் இயம்புவதுர் மறையாமல்
சாற்றுகின்ற எம்குறளும் தக்கதோர் இலக்கியந்தான்
இவ்வுலகின் வாழ்விற்கே இல்லறந்தான் முதற்படியாம்
அவ்வாழ்வும் அறவழியே அமைந்தால்தான் வளம்பெருகும்
அவ்வறமும் தழைத்துவர அழியாத பெரும்பொருளைச்
செவ்வையுறப் பெற்றல்தான் சிறப்பாகத் தான்வளரும்
இத்தகைய கருத்தெல்லாம் இனிதமைத்து முப்பாலாய்
இத்தலத்து வாழ்விற்கே இலக்கியமாய்ச் செய்தமைத்தேன்
அன்னத்தின் செயலொக்கும் அறிவுள்ள மாணுக்க
நின்று இனிமேற் பேசுதற்கு நேரமில்லை உற்றமகன்
என்னடியான் தத்துவத்தின் இயல்பறிய அழைத்துவிட்டான்
சென்று வருவனென்று செப்பி மறைந்துவிட்டான்
ஒருகுறளால் உலகாண்ட ஒப்பற்ற ஆசானின்
கருத்துரையைப் புன்சொல்லால் கவியாக்கிப் படைத்துவிட்டேன்
செவிகைக்கச் சொல்கவியைச் செவிசாய்த்துக் கேட்டுவந்த
கவியரங்கின் நாயகற்கும் கவிவாணர் எழுவர்க்கும்
பெருங்குணமார் அன்னையர்க்கும் பெரியோர்க்கும் தம்பியர்க்கும்
கருப்பட்டிக் கவிராயன் கனிவான நன்றிசொல்லி
இருக்குமிடம் செல்வேன் இனிது.

பின்னுரை

கருப்பட்டி இருக்குமிடம் எறும்புவரும் எறும்பிருக்கும்
இடந்தேடிக் கருப்பட்டி எந்நாளும் போவதில்லை
குறட்பட்டி மன்றத்துக் குவிந்திருக்கும் எறும்புகளைக்
குளிப்பாட்டி இலக்கியத்துக் குளிர்தந்தார் கவிராயர்.

கருப்புக் கொடி நிகழ்ச்சி தமிழகத்தின் எழுச்சி! கழகத்தின் மாட்சியை உணர்க!

ஆணையைத் திரும்பப் பெறுக!

திரும்பச் செல்லும் குடியரசுத் தலைவரே! தமிழகத்தின் எழுச்சியைக் கருப்புக் கொடி நிகழ்ச்சியினை நீங்கள் காணவில்லை. கழகத்தின் மாட்சியினை உணர்ந்து ஆணையைத் திரும்பப் பெறுக.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியினைக் குறைத்து மதிப்பிட்டவர்களும், இவர்களுடைய கிளர்ச்சியினாலே எதனையும் சாதிக்க முடியாது என்று சலித்துக் கொண்டவர்களும், இந்த எதிர்ப்பினாலே குடியரசுத் தலைவரின் கட்டளைதான் வலுப்படுமே தவிர வகையான பலன் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்று வம்புமொழி சொன்னவர்களும் கழகத்தின் சொல்லுக்கு டில்லியிலேயுள்ள மூலவர்கள், இந்திக் கொள்கையினை உருவாக்கி அதனைத் தென்னக மக்கள்மீது திணித்துவிடத் திட்டம் தீட்டிக்கொண்டிருப்பவர்கள், செவிசாய்த்துத் தங்களின் இருக்கைகளை விட்டுக் கீழேயிறங்கிவந்து மதிப்பளித்து மறுமொழி தருவார்கள் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். தமிழகத்திலேயிருக்கும் தாசர்களைத் தவிர நல்ல தமிழினத்தவரெல்லாம் முன்னேற்றக்கழகத்தின் இந்தி எதிர்ப்புக்கிளர்ச்சியினை ஆதரிக்கத் தவறவில்லை. குமாரபாளையம் பொதுக்குழுவின் முடிவுகளைக் கேட்ட தமிழகம் தன் விழியுயர்த்தி வரவேற்றது என்பதனை கழகச் சார்பற்ற நல்லவர்களின் சொல் கேட்டவர்கள் அறிந்திருக்கமுடியும். மொழிவிசாரணைக் குழுவும். அதன் தொடர்ச்சியாக அமைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவும் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இந்திய ஆட்சிமொழியாகத் திணிப்பதில் காலவரையறை ஏற்படுத்தப் போவதில்லையென்று இந்தியாவின் பிரதமர் என்ற தகுதியில் சவகர்லால் நேரு கொடுத்த வாக்குறுதிகளை மாற்றியமைக்கும் வகையில் குடியரசுத்தலைவரின் ஆணைகள் வருவதைத் தடுத்தாக வேண்டுமானால் கழகம் தன் குரல் கொடுத்தாக வேண்டும். இதனைத்தான் ஆகஸ்ட் 31-ம் நாளுக்குள் அவருடைய புதிய உத்திரவினைத் திரும்பப் பெறவேண்டும் என்று முன்னேற்றக் கழகம் கேட்டது. குடியரசுத் தலைவருக்குப் பாதபூசைகள் செய்வதில் மிகவும் பழக்கப்பட்டுத் தங்களின் பண்புகளையெல்லாம் பங்கப்படுத்திக் கொண்டவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தி எதிர்ப்புக்குரலைக் கேலி பேசுவதற்குத் தங்கள் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் பயன்படுத்திக் கொண்டனர். கழகம் தன் படைவலிவைக் காட்டக்கூடாதென்று வடவர்க்கு அடிமையாகிவிட்ட வெறுங் கூட்டம் ஓலமிட்டுக்கொண்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் காட்டிய இந்தித் திணிப்புக் கொள்கையை இருபது ஆண்டு காலமாக எதிர்த்துக்கொண்டிருப்பதை அதனுடைய முன்னோடிகளைப் பற்றிய வரலாறு உணர்ந்தவர்கள் நிச்சயம் அறிந்திருப்பார்கள். பதவியென்றவுடன் கட்சிகளின் கிளைக்குக் கிளை தாவிக் கொள்வதை தங்களின் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கும் மாணிக்கவேலரைப் போன்றவர்கள் வேண்டுமானால் மறந்துவிட்டவர்களாக இன்றைய தினம் நடித்துக் காட்டலாம். ஆனால், தமிழ்ப்பற்றும் தாயகப்பற்றும் கொண்டுள்ள தமிழர்கள் மாற்றான் கால் வருடி வாழவேண்டும் என்ற எண்ணமில்லாதவர்கள் முதல் மொழிப் போராட்டத்தை இரண்டாவது மொழிப் போராட்டத்தை இழிவுபடுத்தத் தயாராக இல்லை! அதுபோலவே வர இருக்கும் மூன்றாவது மொழிப் போராட்டத்தையும் ஒதுக்கித் தள்ளிவிடப் போவதில்லை தங்களுடைய ஒத்துழைப்பினைத் தரப் போகிறார்கள்! முன்னேற்றக் கழகம் இந்தியை எதிர்க்கத் தன் ஆற்றலைக் காட்டவும் அணிதிரட்டவும் தயாராகிவிட்டவுடன் சென்னை சர்க்கார்தான் தன்னுடைய கருத்தினைத் தெரிவிக்க வேண்டும். அரசியல் நெறிகொண்டவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் 'முதல் அமைச்சர்' என்று ஒன்று இருக்க வேண்டுமே அது என்ன சொல்கிறது என்றும் எதிர்பார்த்திருக்க முடியும். நிச்சயமாகச் சிவஞானம் என்றோர் உருவம் இருக்கிறதே அதனிடம் கேட்கவேண்டும் என்று எவரும் எண்ணியிருக்கமாட்டார்கள்! எல்லா நிலைமைகளிலும் முதலமைச்சரை மூலையிலே தள்ளி உட்காரவைத்துவிட்டு முன்னுக்கு வந்து உளறிக் கொட்டுவதிலே வல்லவரான சுப்பிரமணியம் என்பவர் கழகத்தின் இந்தி எதிர்ப்புக் கொள்கையைக் கண்டித்துத் தன் குரலைக் காட்டினார்! குடியரசுத் தலைவரின் கொள்கை அறிக்கை எந்த வகையில் சரியானதென்பதை அவரால் சொல்ல முடியவில்லை. ஆனால், கழகத்தின் முடிவைக் கண்டிக்கத் தவறவில்லை. சென்னை சர்க்கார் எல்லாக் காரியங்களையும் தமிழிலேயே நடத்திக் கொண்டிருப்பதால் இந்தக் கிளர்ச்சி தேவையற்றது என்பதாகும். கழகம் எந்தக் காரணங்களுக்காகத் தன் போராட்டத்தினைத் தெரிவித்து முடிவெடுத்தது என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாதவர் அமைச்சராக மட்டுமல்ல வட நாட்டு எசமானர்களுக்குத் தூது செல்லுபவராகவும். இருக்கிறாரே என்பதற்குத்தான் நாம் வருந்த வேண்டியிருக்கிறது 'விசயம் தெரிந்த'வரின் விவகாரம் இப்படியென்றால் சென்னை சர்க்காரின் மற்றவர்களைப் பற்றிய விளக்கமே தேவையில்லை. எல்லோரும் 'கோவிந்தா' என்றார்கள், மந்திரிக்குப் பின்னாலேயே மந்திரி 'இந்தி' தேவையென்று.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் செப்டம்பர் திங்களில் கழகம் பிறந்த திங்களில் துவங்கும்போது எங்கெங்கிருந்து அணிவகுப்புகள் எந்தெந்த வகையில் தொண்டர்கள் பட்டாளம் வரப்போகின்றன என்று நாம் கணக்கெடுத்துக்கொண்டிருந்த வேளையில், வடநாட்டு ஏடுகள் எல்லாம் நாட்டுப் பிரிவினைக்குத் தென்னகம் தயாராகிவிட்டதென்று எழுதிக்கொண்டிருக்கும் நேரத்தில், கழகத்தின் போர்க்குரலுக்கு மூல காரணமான கட்டளையினைப் பிறப்பித்த குடியரசுத்தலைவர் ராசேந்திரர் தமிழகத்திற்கு பவனி வருவதாகச் செய்தி வந்தது. இந்தப் பவனி தமிழர் தம் நெஞ்சிலே கால் வைப்பது போல என்று சொன்னால் அதுமிகையல்ல! அவரைத் தமிழகத்தார் தாய்மொழியின் பெருமை காத்திடத் துணிந்துவிட்ட திராவிட மொழிக் குடும்பத்தார் கருப்புக்கொடி காட்டி வரவேற்பர் என்று முன்னேற்றக் கழகம் முடிவெடுத்தது. கழகத்தின் பொதுச்செயலாளர் அனுப்பிய கடிதத்திற்கு முறையான பதில் அனுப்பத் தெரியாத குடியரசுத் தலைவர். அவர்தம் தலைமையை வரவேற்றுப் பெற்றிருக்கும் பிரதமர், கருப்புக்கொடி காட்டுவோம் என்ற செய்தி கிடைத்த நான்கே நாட்களுக்குள் துடித்துவிட்டார்கள்! இரண்டு நாட்களுக்குள் பண்டித பந்த் என்பவர் தாராளமாகப் பேசுகிறார் இந்தித் திணிப்பு நிச்சயமாக இல்லை. புதிய சட்டங்கள் வரப் போகின்றன என்று! அதற்கு மறுநாள் பிரதமர் நேரு போராட்டக் குழுத்தலைவருக்குக் கடிதம் எழுதுகிறார் நாங்கள் வஞ்சித்துவிடமாட்டோம். நீங்கள் கருப்புக்கொடி காட்டப்போவது வருந்தத்தக்கதென்று! குடியரசுத்தலைவர் அதனைத் தொடர்ந்து செய்திகளைத் தந்திருக்கிறார் தென்னகத்தவரே அச்சப்படாதீர்கள் சோவியத் நாட்டைப்போல் இங்கேயும் மொழிப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்வோம் என்று! கழகம் அச்சப்பட வேண்டிய அரசியல் இயக்கமல்ல என்றால் இவர்கள் இப்படி அலறியிருக்கத் தேவையில்லை. சென்னையிலேயிருக்கும் அமைச்சர்கள் கருப்புக்கொடி காட்டுவதை அடக்கிவிடுவார்கள் என்ற நம்பிக்கை டில்லிக்காரர்களுக்கு என்றைக்கும் வராது. நேரு வந்தபோது இவர்களை நம்பித்தான் கொல்லைப்புற வழிகளைத் தேட நேரிட்டது. எனவேதான் புதிய அறிக்கைகளைத் தந்தார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் கருப்புக் கொடி காட்டும் முடிவினைத் தெரிவித்த பிறகு டில்லியிலேயிருக்கும் பட்டே மந்திரிகள் குட்டி மந்திரிகள் புதிய வாக்குறுதிகளை அளித்த பிறகு சென்னையிலேயிருக்கும் குட்டி மந்திரிகள் நிலைமை அறிந்து பேசினார்களா என்றால் இல்லை! அமைச்சர் சுப்பிரமணியம் என்பவர் கருப்புக் கொடி காட்டுபவர்களை அடக்கி ஒடுக்குவோம் என்று கோவையில் பேசினார்! ஆனால் அவரே சென்னையில், போதுமான வசதிகள் தரப்படும் போது கருப்புக் கொடி நிகழ்ச்சிகளைக் கைவிடவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்! அடக்கி ஒடுக்குவோம் என்று நேரு பேசியிருந்தால் வரவேற்றிருக்கலாம். ஆனால் அவர் உலகத்திலே பெரிய மனிதர் என்று பெயர் வாங்கியிருப்பவர்! கோயில் பாளையத்திலே இடம் பெற்றுக் கொண்டவரைப் போல் நேரு பேச முடியாதுதான்! அதைப்போலவே நமக்குக் கிடைத்த சொல்லழகன் காமராசர் தூத்துக்குடியிலும் நெல்லையிலும் சவால் மிரட்டல்எல்லாம் விடுத்தார்! ''அவாளுக்கு எதுவுமே தெரியாது இவாள்தான் கருப்புக்கொடி காட்டப்போறாளாம்'' இப்படி அம்மாமி மொழி பேசுவதிலே தன் திறமையைப் காட்டுபவர் காமராசர் இவரும் கேட்டார். 'நம்ம ராஷ்டிரபதிக்கா கருப்புக் கொடி'-நாமெல்லோரும் சேர்ந்துதான் குடியரசுத் தலைவராக்கினோம். அவரை எதிர்க்கலாமா என்ற புலப்பல்! குடியரசுத் தலைவர் எனப்படுபவர் காங்கிரசுக் கட்சியின் அபேட்சகராக வந்த ராசேந்திரப் பிரசாத்! போட்டியில்லாமல் வந்திருந்தால்கூட ஒப்ப முடியும்! அதே ராசேந்திரபிரசாத்தைக் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர் என்று 'இவாள் இருக்காளே காமராசர்' சொல்லு என்றால் அதனை எவர் நம்புவார்! காமராசருக்கு அந்தத் தேர்தல் மறந்து போயிருக்கவேண்டும் அல்லது குடியரசுத் தலைவர் பதவிக்கு ராசேந்திரப்பிரசாத் தன்னுடைய பழைய உணவு மந்திரி வேலை முடிந்தவுடன் நேராக வந்துவிட்டார் என்று எண்ணியிருக்க வேண்டும்! இரண்டில் எதைச் செய்திருந்தாலும் அவருடைய நினைவுக் குறைவுக்கு வருந்த வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்! கருப்புக் கொடியைக் கிழிப்பேன். நிகழ்ச்சியை ஒழிப்பேன் என்று நெல்லையில் முழங்கும்போது பண்டித நேரு சம்பத்தின் சொல்லுக்குச் செவிமடுத்துக் கடிதம் அனுப்புகிறாரே அதை எண்ணியாவது கழகத்தின் முயற்சியை மதிக்க வேண்டாமா? நிகழ்ச்சிக்கு ஒருவாரத்திற்கு முன்பே முதலமைச்சர் முகாரிபாடியது ஏன்? அடக்குவோம் என்ற அதிகாரம் இருந்தால் அலறியதும் ஏன்?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர்மானங்களுக்கேற்ப புதிய ஏற்பாடுகளை விரைவிலேயே பாராளுமன்றம் செய்துமுடிக்கும் என்ற நம்பிக்கையில், ராசேந்திரர்-நேரு-பந்த்-சுப்பிரமணியம் ஆகியவர்களின் சொல்லுக்கு மதிப்பளித்து கழகம் கருப்புக்கொடி காட்டும் நிகழ்ச்சியினை நிறுத்தி வைத்துக்கொண்டுள்ளது. சுப்பிரமணியத்தின் சொல்லை நம்பமுடியாதுதான். இடறி விழுவதும் தடுமாறிக் கவிழ்ந்து போவதும் அவர் பழக்கம். ஆனால் அவருடைய எசமானர்கள் மூவரையும் சந்திக்க வேண்டிய நேரத்தில், சந்திக்கவேண்டிய இடத்தில் கழகத்தின் போராட்டக்குழுத் தலைவர் சந்தித்து, அவர்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கும்படி வலியுறுத்துவார்! மிகக் குறுகிய இடைக்காலத்தில் தமிழகத்தைத் துள்ளியெழச் செய்யும் தனித்தன்மையும் தளராத்திண்மையும் முன்னேற்றக் கழகத்திற்கு உண்டென்பதைக் கண்டவர்கள் செப்டம்பர் வரும்வரை காத்திருக்கிறார்கள்! மாற்றார்கள் தங்களின் சஞ்சலபுத்தியை மாற்றிக்கொள்வது நல்லதாகும்! குற்றாலத்தில் ஓய்வெடுக்கும் வேளையில் இருக்கும் சீவானந்தம் கூட 'கருப்புக்கொடி காட்டுவது நியாயமற்ற செயல்' என்றாராம். இப்படிச் சொல்லியாவது தானும் தமிழ்நாட்டில் இருப்பதைக் காட்டிக் கொண்டாரே! சிவஞானத்துக்குச் சோடியில்லையென்று எண்ணினோம். நான் அவருக்குச் சேடியாகிறேன் என்கிறார் இவர். தேசிய ஏடுகளுக்கு இப்போதுதான் மனநிறைவு-கொஞ்சம் நிம்மதி! ஆச்சாரிக்கு வால்பிடித்து காங்கிரசுக்கே கட்டில்போடும் தினமணிக்காரர்கள் தங்களது கொள்கைகளை ஏதாவது ஒரு பக்கத்தில் நிறுத்திக்கொண்டு கழகத்துக்கு ஆய்வுரை தரத் துடிக்கலாம்! நடுநிலைக்காரர்களான ''தமிழ்நாட்டார்'' கருப்புக்கொடி காட்டுவது கண்ணியமற்றதென்று சொன்னார். நிறுத்திவைக்கப்பட்டவுடன் - விவேகமான முடிவு என்றார். பிறகு - தமிழ்மக்கள் தொடர்ந்து போராட வேண்டுமென்று யோசனைகள் தருகிறார்! அவரைப் போன்றவர்களிடம் நாம் கேட்க விரும்புவது, தூண்டுவதும் தூபம் போடுவதும்தான் உங்கள் வேலையா ஏன் நீங்களே குடியரசுத்தலைவரின் கட்டளையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யக்கூடாது! கருப்புக்கொடி காட்டி எதிர்ப்பைக் காட்டவேண்டும் என்று சொல்லியிருந்தால், ஆய்வுரைக்கு மதிப்பிருக்கும்! கவர்னர்களுக்கு விருந்து வைத்துப் புதிய விருந்துகளைத் தேடி அலைபவர்களுக்கெங்கே இத்தகைய துணிவுகள் வரப்போகின்றன! இறுதியாக, திரும்பச் செல்லும் குடியரசுத்தலைவரே! தமிழகத்தின் எழுச்சியினைக் கருப்புக்கொடி நிகழ்ச்சியினை நீங்கள் காணவில்லை. கழகத்தின் மாட்சியினை உணர்ந்து ஆணையைத் திரும்பப் பெற்றுக்கொள்க!

—கூடலரசன்.

விழித் திரையைப் "பெயர்த்து" வைத்தல்

செஞ்சிலுவைச் சங்கத்து மத்திய கமிட்டியைச் சேர்ந்த கண் மருத்துவ நிலையங்கள் தமது பத்தாம் ஆண்டு விழாவைக் கொண்டாடி வருகின்றன. இந்தப் பெயர் வாய் நிறையும்படி இருந்தாலும், அந்தக் குழு, முகத்தின் மற்றொரு பகுதியான கண்களைக் கவனித்துக் கொள்கிறது.

'கார்னியா' என்பது கண் விழிக்கு வெளியே ஒளியூடுருவும் வகையில் அரை மில்லி மீட்டர் பருமனோடு அமைந்து, ஒளிச் சிதறலுக்கு வழி செய்கிறது. சுருக்கமாக அது இல்லாமல் ஒருவருமே பார்க்க முடியாது. 'கார்னியா' குவிந்த கண்ணாடி வடிவில் அமைந்து, உலகில் நாம் காணும் பொருள்களை நேராக, சிறிதாகக் காட்டுகிறது.

உடலின் மற்ற பகுதிகளைப் போலவே இந்தக் 'கார்னியா'வும் குறைபடக் கூடியதுதான். நோய்களால் இந்தக் கண் திரை பழுதுபடலாம். வேறு விதமாகவும் அதற்குப் பழுது நேரிடலாம். திரையில் அழற்சி, இரத்தம் வடிதல் முதலியவை ஆபத்தான நோய்களாகும். சாதாரணமாக இதில் தோன்றும் நோய் 'காடராக்ட்' ஆகும். கண் விழிக்குள் ஒளி ஊடுருவ முடியாது போகும் ஒரு நோய். இதனால் இறுதியில் பார்வையையிழக்க நேரிடலாம்

இந்த நோய்க்கு ஒரே யொரு மருத்துவ முறைதான் உண்டு. அது தான் அறுவை முறை. நரம்பு அறுவைக்கு அடுத்தபடியான மருத்துவம் கண் அறுவையேயாகும், இந்த முறையில், திரையைக் கிழித்தெடுத்துவிட்டு, வேறு ஒரு விழித்திரையை அங்கே பொறுத்த வேண்டும். ஒருவர் இறந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவருடைய விழிகளிலிருந்து திரையை அகற்றி விட வேண்டும்; அந்தத் திரையைத்தான் வேறொருவர் கண்ணில் பொருத்த முடியும். இந்த முறை பல்லாண்டுகளுக்கு முன்பே தெரியும்; பத்தாண்டுகளுக்கு முன்னால்தான் ஹாலத்தில் விழித்திரையைச் சேர்த்து வைக்கும் நிலையத்தை, செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தார்கள், 'இரத்த சேமிப்பு' எலும்பின் திசுக்கள் நாசமடையாமல் சேமித்து வைக்கும் 'எலும்புச் சேமிப்பு' முதலியவற்றில் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டு வருகிறது.

முதன் முதலாக விழித் திரையைப் பெயர்த்து வைக்கும் வேலை, பிரெஞ்சுப் புரட்சியின் போது நடைபெற்றது, என்றாலும் அது விஞ்ஞான முறைப்படி நடைபெற்றதல்ல. அப்போது, வைத்தியர், 'உயிருள்ள' விழித்திரையைப் பயன்படுத்தாமல், கண்ணாடித் துண்டு ஒன்றைப் பயன்படுத்தினர். முதன் முதல் இந்த மருத்துவத்திற்குள்ளான அந்த நோயாளியின் நிலைமை பிறகு என்னவாயிற்று என்பது தெரியாது. என்றாலும், இதை ஒரு முழு வெற்றியாகக் கொள்ள முடியாது என்று பிற்காலத்தில் வைத்தியர்கள் ஆராய்ச்சிகளின் விளைவாக முடிவுகட்டினர். பிறகு மிருகங்களிடையே விழித்திரைகளிலும் 'காடராக்ட்' தோன்றியது. இன்றுவரை அந்தப் பிரச்னை இருந்து வருகிறது. இதற்குத் தீர்வு காண்பதற்காக உலகின் பல பகுதிகளிலும் ஆராய்ச்சிகளும் பரிசோதனைகளும் நடத்தி வருகிறார்கள்.

இந்த மருத்துவத்தை வெற்றிப் பலனுடன் நடத்தி முடித்தவர் டாக்டர் பிக்கர் என்ற பிரிட்டிஷ் வைத்தியரேயாகும். இரண்டு அரேபிய மான்களின் கண்களில் அவர் இந்த முறையைப் பயன்படுத்திப் பார்த்தார். நெடுங்காலத்துக்குப் பிறகுதான் இந்த முறையை மனிதர்கள் விஷயத்திலும்பயன்படுத்தலாம் என்பதை மருத்துவர்கள் கண்டறிந்தார்கள். மனிதரின் விழித்திரை மனிதர்களுக்கு மட்டுமே பயன்படும் என்றும், விலங்குகளின் விழித்திரை விலங்குகளுக்குத்தான் உதவும் என்றும் அவர்கள் கண்டார்கள். இது போன்று திசுக்களைப் பொருத்தும் வேலைகளில் பெரும்பாலானவை அந்தந்த இனங்களில் தான் பொருத்தமாயிருக்கும்.

1906-இல் ஸ்விட்சர்லந்து கண் டாக்டரான ஜர்ம் என்பவர் இந்த முறையைச் சீர்படுத்தினார். அது முதல் பல்வேறு 'கண் அறுவைகள்' முக்கியமாக உட்ரெக்ட் கண் வைத்திய நிலையத்தில்-பேராசிரியர்கள் டான் டெர்ஸ், வீல் என்பவர்களால் தான் நடத்தப்பட்டன. விழித்திரை பெயர்த்து வைக்கும் முறையை அவர்கள் சரியானபடி வகுத்துத் தந்தார்கள்.

இந்த முறை, மதக் கட்டுப்பாட்டிற்கு மாறானதா இல்லையா, இதனால் சட்டப்படி தகராறு விளையுமா என்பது நெடுங்காலமாக இருந்து வரும் பிரச்னையாகும். இறந்து போனவரோ அல்லது உறவினர்களோ முன்கூட்டி அனுமதியளித்தாலன்றி, இறந்தவரின் உடலிலிருந்து வைத்தியர்கள் விழித்திரையை அகற்றுவதில்லை.

அது மட்டுமின்றி, சந்தேகத்துக்கிடம் இருந்தால் தவிர பிணத்தை அறுத்துப் பார்க்கக் கூடாது என்று சட்டம் விதிக்கிறது. உறவினர்களின் அனுமதி பெற்று அதைச் செய்யலாம்.

இறந்த பிறகு விழிகளைத் தானம் செய்வது ஓர் அறச் செயல் என்பதையும், பார்வை யற்று வாழும் ஒருவருக்கு அது பார்வை யளிக்க உதவுகிறது என்பதையும் பொது மக்களுக்கு எடுத்துக் கூற, டச்சுச் செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது, டச்சு மக்களும் இதை நல்ல முறையில் ஏற்றுக் கொண்டு விழித்திரைகளை வழங்கி வருகிறார்கள். ஆகவே 'விழித்திரை சேமிப்பு நிலையங்களில் அவற்றுக்குப் பஞ்சமேயில்லை. என்றாலும், இதனால் எல்லாப் பிரச்னைகளுமே தீர்ந்து விடவில்லை. யாரேனும் ஆஸ்பத்திரிகளில் இறந்து விட்டால் அவரது உறவினர்களின் முன் அனுமதியைக் கோரும் அவசியமின்றியே டாக்டர்கள் அவர் கண்களை ஆபரேஷன் செய்யலாம் என்று வகை செய்யும் சட்டமொன்றை இயற்றச் செய்ய வேண்டும் மென்பது டாக்டர்களின் நோக்கமாகும். இது சிறிது அளவுக்கு மீறிய செயலாகத் தோன்றலாம். மருத்துவத்துறை வல்லுநர்கள் தமது வரம்பை மீற இந்த வகையில் எதையும் செய்ய விரும்பவில்லை என்பதையும் இங்கே நினைவு படுத்த வேண்டும், இத்தகைய சட்டம் ஒன்று உருவானால் கூட, இறந்தவர், தமது மரணத்துக்கு முன்னாலேயே இது பற்றித் தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்க வேண்டும். அந்தக் கண்கள் இனித் தமக்குப் பயன்படா என்பதையும், பார்வை யற்ற வேறொருவருக்கு அவை பயன்படும் என்பதையும் அறிந்து கொண்டு, அவர் இந்த விருப்பத்தை வெளியிட்டிருக்க வேண்டும்.

நூல் நயம்

தமிழ்ச் செல்வி (இலக்கியத் திங்கள் வெளியீடு) ஆசிரியர் ப. சுந்தரவேலனார். முகவரி 87. வைசியர் தெரு, புதுச்சேரி. விலை 20 காசு.

தமிழ்ச் செல்வியின் முதல் இரண்டு இதழ்கள் கண்டோம். இலக்கியத் தமிழில் நடைபோடும் பல கட்டுரைகள். கதைகளுடன் வெளி வருகிறது பத்திரிகை. 'கவிதையோ கவிதை' என்ற கட்டுரையின் ஆசிரியர், கவிதை பற்றிப் பல ஆங்கில ஆசிரியர்களின் மேற்கோள்களுடன் விளக்கமாக எழுதியுள்ளார் எனினும் நல்ல கவிதை கேட்டு இறைவனே நேரில் வந்தான் என்று கூறுவது காலத்திற்குப் பொருந்தாத கருத்தாயிருக்கிறது. பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் அகர வரிசையில்இதழ்தோறும் தொடர்ந்து வெளியிடுவது நல்ல முயற்சி. அது இன்னும் அதிகமான அளவில் வெளிவர வேண்டும். ஆசிரியரின் குறள் விளக்கக் கட்டுரைகள் சிறப்பாய் உள்ளன. பொதுவாக ஆசிரியரின் தமிழ்ப்பற்றின் அடையாளச் சின்னமாக விளங்குகிறது இந்த வெளியீடு.

இன முழக்கம்: (வார ஏடு) இணையாசிரியர்கள்: செல்லம், செழியன். முகவரி: 234. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். விலை15 சதம்.

இலங்கை நாம்-தமிழர் இயக்க வார ஏடாக வெளிவரும் இப்பத்திரிகை எழுச்சிக் கட்டுரைகளுடன் வந்திருக்கிறது. தமிழினத்தின் நன்மைக்காகஇவ்விதழ் பாடுபடும்என்று நம்ப இடமிருக்கிறது.

ஏன் தமிழரசு? ஆசிரியர் க. செல்வநாயகம். தமிழரசுப் பதிப்பகம் 822, கொழும்பகம் வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கை விளக்கமாக இந்தப் புத்தகம் விளங்குகிறது. தமிழின உணர்ச்சியைத் தூண்டிவிடுவதோடு வெறும் உணர்ச்சி மயமாக இல்லாமல் ஆணித்தரமான வாதங்களால். ஈழத்தில் தமிழருக்குச் சுயாட்சி தேவை என்பதை இவ்வாசிரியர் விளக்கமாக எடுத்துக் காட்டுகிறார்.



பெரும் பேராசிரியர், செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்கள், ருஷ்யாவில் நடக்கும் கீழ்நாட்டு மொழிப் பேரறிஞர்கள் மாநாட்டிற்குச் செல்லும்போது, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வழியனுப்பிவைக்கப்பட்ட போது எடுத்தபடம். தமிழ்ப்பேராசிரியர்கள், புலவர்கள், கவிஞர்கள் பத்திரிகை யாசிரியர்கள் பலர் வந்திருந்து வழியனுப்பி வைத்தார்கள்.

மகேந்திர வர்மன் மண்டபம் (2-ம் பக்கம்) தொடர்ச்சி

வேண்டும். இது என் ஆணை. ஆத்திரத்தில் அறிவை இழக்காதே. எரிந்தது வாதாபி நகரம், இனிச் சரிந்து விடும் பல்லவர் குலம். வேதனையில் உன் தாய் சிந்திய கண்ணீரிலேதான் பல்லவர் குலத்தின் சோதனை அடங்கி இருக்கிறது. சரி...இருட்டும் நேரமாகி விட்டது. போகலாம் வா...... (இருவரும் செல்கின்றனர்)

காட்சி 2.

உளியும் கையுமாய் வேலையிலாழ்ந்திருக்கின்றான் குணசீலன்.

பல்லக்கு ஒன்று வருகின்றது அதனின்றும் நரசிம்ம வர்மனின் மகள் குந்தவி கீழே இறங்கி வருகின்றாள். சிவிகை சென்று விடுகின்றது, குந்தவி சிற்பங்கள் ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டே குணசீலனின் அருகே வருகின்றாள். அவன் செயலிலே ஆழ்ந்து சிற்பம் செதுக்குவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றான்.

குந்தவி : ஆகா!...உளி பாடும் ஒயிலான ஓசை கேட்க இனிமையாய் இருக்கின்றது.

குண : இது உங்கள் மாளிகையின் இசைக் கூடமில்லை இளவரசி, சிற்பக் கூடம்!

குந்தவி : இல்லை, இல்லை... இது சிற்பக் கூடமில்லை. சிந்தனைக் கடலிலே இழுத்துச் செல்லும் சிங்கார ஓடம். உங்கள் கை பட்டதால் கரடுமுரடான கற்பாறைகளெல்லாம், உயிரும் உணர்ச்சியும் கூடி உள்ளத்தை அள்ளும் உயர்ந்த ஓவியங்களாகி விட்டன.

குண : இளவரசி! புகழுரைகள் போதும், புவியாளும் புரவலனின் புத்திரி நீங்கள். கோடிவிதைதையும் கூழுக்கு என்று வாழ்கின்றவன் நான். என்னை நீங்கள் ஏன் புகழ்ந்து பேச வேண்டும்.

குந்தவி : பொரிந்து தள்ளுகிறீர்களே. இத்தனை நாட்களாகப் பேசா மடந்தையாக நீங்கள் நடித்தது பொய்தானா ?

குண : மன்னிக்கவும். பெண்களுடன் பேச அறியாத பேதை நான். நீங்கள் இவ்வாறு அடிக்கொரு தடவை இங்கு வருவதால் என் வேலை தடைபடுகின்றது. இனி நீங்கள் வருவதை நிறுத்தி விடுங்கள்.

குந்தவி : அல்லி மலர்ந்தது அம்புலிக்கு ஆயிரம் தேள் கொட்டியதைப் போலாகிவிட்டது என்று சொல்வதுபோலல்லவா தாங்கள் பேசுகின்றீர்கள் முடிவாகச் சொல்லுங்கள். உங்களுக்கு என்மீது விருப்பமில்லையா? என் நெஞ்சில் பாம்புபோல் கொட்டாதீர்கள்.

குண : குந்தவி, மண்டலத்துக்கதிபதி உன் தந்தை. உலகம் அறியாதவள் நீ. உன் பளிங்கு உள்ளத்தால் என்னை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

குந்தவி : இல்லை, நீங்கள்தான் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. உங்கள் நினைவால் சாகிறாள் ஒருத்தி. என்றறிந்திருந்தும் நீங்கள் ஊமையாய் இருக்கின்றீர்கள். உங்கள் மௌனம் என்னை அலைக்கழிக்கிறது.

குண : அப்பப்பா...இந்த உலகில் நான் ஏன் பிறந்தேனோ? என்னால் எத்தனை உயிர்களுக்கு வேதனை. நான் பிறவாமல் இருந்திருந்தால் எல்லாம் நலமாக முடிந்திருக்கும்.

குந்தவி : அப்படியெல்லாம் பேசாதீர்கள்...

குண : குந்தவி, சோகத்திலே சொர்க்கத்தைக் காண்பவன் நான். என் வாழ்வின் ஏடெல்லாம் இன்னலே மின்னும். உன் ஆசை நடக்க முடியாது.

குந்தவி : தடைகள் அனைத்தையும் தாண்டி நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். என்னை நீங்கள் ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். என் இதயத்தை உங்களிடம் பறி கொடுத்துவிட்டேன். இனி நீங்கள்தான் என் துணை.

குண : தவறு நேர்ந்துவிட்டது குந்தவி. நீ என் நிலைமையை அறியாய். இன்னல்களின் இடிபோன்ற தாக்குதல்களால் கரைந்து கரைந்து என் இதயம் இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டது. என்னை நீயும் வருத்தாதே நீ வாழவேண்டும். மறுத்ததற்காக என்னை மன்னித்துவிடு. நீ என்னை மறந்துவிடு.

[போய்விடுகின்றான். குந்தவி கண்ணீர் வடியப் புலம்பி நிற்கின்றாள்.]

காட்சி 3.

சத்தியசீலரும் குணசீலனும் உரையாடிக்கொண்டுள்ளனர்.

சத்திய : குணசீலா...உன் திறமைக்குச் சோதனைகாலம் வந்துவிட்டது.

குண : நான் என்ன செய்யவேண்டுமப்பா...

சத்திய: முறை பிறழ்ந்த மன்னனின் முடிப்பெருமையைக் குலைக்கவேண்டும்

குண : அப்பா, பலமுறை இப்படித்தான் சொன்னீர்கள். ஆனால் உளியோடும் சுத்தியோடும் உன் வேலையைப் பாரென்று என்னைக்கற்களோடு போராட வைத்துவிட்டீர்கள். காலதேவனின் அடிச்சுவட்டில் நாட்கள் புழுதிப்படலம்போல் மறைந்துகொண்டிருக்கின்றன. என் தாயின் கனவு எப்பொழுது நிறைவேறுமோ எனக்கே புரியவில்லை.

சத்திய : நீ அவசரக்காரன். இத்தனை நாட்களாக நான் பட்டபாட்டிற்குப் பலன் கிடைத்துவிட்டது அதோ பார் அந்தப் பாறையில் நானே ஒரு புது மண்டபம் செதுக்கப்போகிறேன். நான் கற்ற வித்தையின் மகிமை அதில்தான் இருக்கிறது. உன் தாயின் எண்ணம் பூர்த்தியாக அதுவே ஏதுவாக இருக்கும். அதிலே நான் உருவாக்கப்போகும் மண்டபம் அழகானது, ஆனால் அபாயம் நிறைந்தது! மகிமை பொருந்தியது, மகேந்திர வர்மனின் செயலுக்குத் தகுந்த நீதி வழங்க வல்லது. அந்த விந்தை மிகுந்த மண்டபத்தின் தரையை மிதித்தால் தளம் பெயர்ந்து விழுந்துவிடும்.

குண : அதனாலென்ன செய்யமுடியும் அப்பா...

சத்திய : பைத்தியக்காரா, படபடப்பு உன் பகுத்தறிவையே விழுங்கி விட்டது. நான் அந்த மண்டபத்தை உருவாக்கி முடிப்பேன். பாரெங்கிலும் பார்க்கமுடியாத அழகிய மண்டபமாகிய அதைப் பற்றி நரசிம்ம வர்மனிடம் தெரிவிப்பேன். கவின் நிறைந்து கலைமணம் வீசித் திகழும் அம்மண்டபத்தினுள் முதன் முதலில் மன்னன்தான் நுழைய வேண்டும் என்று வாக்கு வாங்கிக் கொள்வேன். வேந்தன் இசைவான்; விதி அவனை விடாது பிடித்துக் கொள்ளும். மண்டபத்தை உருவாக்கி முடிப்பேன். மன்னன் மகிழ்ச்சி பெறுவான், என்னை மனமார வாழ்த்துவான். ஆனந்தம் அலைமோத பெருமிதம் புளகமடையச் செய்ய அதனுள்ளே நுழைவான் நரசிம்ம வர்மன். தரையை மிதிப்பான் தார்வேந்தன், தளம் பெயர்ந்து அவன் தலையைப் பிளக்கும். வேந்தன் உயிர் துறப்பான். வேங்கை உன்றன் கடமையும் ஓரளவு முடிந்துவிடும். ஆனால் அதுவரை நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விரைவில் நான் அந்த மண்டபத்தை உருவாக்கி முடித்து விடுவேன். உன்னைத் தவிர வேறுயாரும் அதை நெருங்கக் கூடாது. நீ கண்ணைப் போல் அதைக் கட்டிக் காக்க வேண்டும்.

குண : அவ்வளவு தானே; வெற்றி அப்பா, பெரும் வெற்றி! என் தாயின் எண்ணம் நிறைவேறுவது திண்ணம். இனி எனக்கு உலகில் யாரும் ஈடில்லை.

சத்திய : குணசீலா, ஒன்றை மறவாதே. உயிரைப் பணயம் வைத்து நான் இதைச் செய்யத் துணிகிறேன். நேரமாகிறது-நீ போய் உன் வேலையைப் பார். நான் அரண்மனை வரை போய் வருகிறேன்.

(போகிறார்.)

G. Loganathan, 15, RAJAVELU MUDALI ST., PERAMBUR

காட்சி 4.

சுற்றிலும் சுடுகாட்டமைதி.

தண்மதியின் வெண்கதிர்கள் பட்டுக் கண்ணைப் பறிக்கும் வண்ணம் திகழ்கிறது ஒரு பெரிய மண்டபம்,

வானம் இடிந்தது போல் ஒரு பெரிய சப்தத்துடன் அம் மண்டபத்தின் தளம் பெயர்ந்து விழுகிறது அடுத்து ஒரு ஓலக்குரல் கேட்கிறது. குணசீலன் பதறியடித்துக் கொண்டு சற்று தொலைவிலிருந்து பாய்ந்து வருகிறான்

குண : ஐயோ !...குந்தவி...நீயா...நீயேன் இங்கு வந்தாய்...? (கற்பாறைகளிடையே நசுக்குண்டு கிடக்கும் அவளைக் காப்பாற்றுகிறான்...)

குண : குந்தவி, என்ன காரியம் செய்தாய்? சிந்திய வியர்வை எல்லாம் சிறந்த பயனளிக்கும் என்று எண்ணினேன் சீரழிந்து விட்டது என் மனோரதம். நான் நினைத்தது ஒன்றாக இருக்க நடந்தது வேறொன்றாகி விட்டது. முட்டாள் தனத்தால் என் முயற்சியில் முழுப்பயன் கிட்டாமல் போய்விட்டது. பெற்றவளின் பழிதுடைக்கப் பல்லவர் குலத்தை அழிக்க சபதம் பூண்ட என்னால் இன்று பச்சிளங் கொடி, பளிங்குச்சிலை பரிதாபமாகக் கிடக்க நேரிட்டது. வஞ்சம் தீர்க்க முனைந்த நான் வஞ்சிக் கொடியாளின் வாழ்வை முடித்து விட்டேன். குந்தவி...சொல் நீ ஏன் இங்கு வந்தாய்...?

குந்தவி : கலைமான் தன் கொம்புகளைத் தேய்த்துக் கொள்வதற்கு வைரம் பாய்ந்த மரத்தைத் தான் நாடும்: வாழை மரத்தை நாடாது. உணவு உறக்கம் ஒழிந்து உள்ளம் வருந்தவே நான் இறுதியாக உங்களைத் தேடி வந்தேன். இங்கு இருப்பதாகக் கேள்வியுற்று ஆவல் மோத உள்ளே நுழைந்தேன். அப்புறம் நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே! இனி என் உயிர் போனாலும் பாதகமில்லை...

குண : அப்படி யல்லாம் பேசாதே குந்தவி. நீ என் மகள். நான் உன் சிற்றப்பன் நீ பெரும் பிழை செய்து விட்டாய்...

குந்தவி : என்ன...!

குண : ஆம் நீ பொன்னும் அறியாய்.. அபலையின் மகனான நான் அரியணையில் அமர்ந்திருந்த உன் தந்தையின் தம்பி, உலகம் இதை அறியாது. முறை பிறழ்ந்தான் மகேந்திர வர்மன்; அவன் குலத்திறகே முடிவு காணப் புறப்பட்டேன் நான். இடையிலே வந்து நீ என் கதையையே மாற்றி விட்டாய். என் குலப்பெருமையைக் குலைத்தவனின் குலப்பூண்டையறுத்தெறியக் குருதிப்பசி கொண்டு வந்து நான் இந்த குளத்துத் தாமரையின்—குறை படாத தங்கத்தின் சாவுக்குக் காரணமாகி விட்டேன். குந்தவி...என்னை நீ மன்னித்துவிடம்மா. உன்னிடம் முன்பே சொல்லிருப்பேன். ஆனால் என் அன்னையின் ஆணை நிறைவேற அதை மறுத்தேன். பெண்பாவம் பொல்லாதது! உன் பிரேமையைக் கொன்ற பித்தனான நான் சரியான பாடத்தைக் கற்றுக்கொண்டேன். குந்தவி...குந்தவி...எங்கே என்னைப்பார்...

[குந்தவியின் குரல் அடங்குகிறது. மூச்சு நின்றுவிடுகிறது. அவள் ஆவி பிரிகிறது அவளை அணைத்துக் கதறுகிறான். குணசீலன்.]

குண : குந்தவி, அன்பை நெஞ்சிலேந்தி ஆதரவு காணவந்த நீ, இந்த அற்பன்மேல் வைத்த ஆசையால் உன் ஆயுளை முடித்துக்கொண்டு விட்டாயே. என்னால் எத்தனை பேருக்குத் துன்பம். என் தாய்க்குப் பல்லவப்பேரரசன் தீங்கிழைத்தான். அப்பல்லவப் பேரரசின் பசுங்கொடி, பவளக்கிளி பிணமாக நான் காரணமானேன். தாயே! உன் உயிருக்கு உயிர் இங்கே கிடைத்துவிட்டது. ஆனால் நான் இனிமேலும் இந்த உலகிலே உயிர்வாழக்கூடாது. இனி நான் வாழ்ந்தால் ஞாயிறும் பழிக்கும் ஞாலமும் தூற்றும்! குந்தவி, நீ செந்தாமரை, நான் சடைப் பாசி! நீ இறந்தபின் இனி எனக்கு வாழ்வு வேண்டாம். உன் கன்னி எழிலை விழுங்கிவிட்ட இந்தக் கல்மண்டபமே என் குருதியையும் குடிக்கட்டும். குந்தவி...குந்தவி...

[பாறையிலே தலையை மோதிக்கொண்டு சவமாய்க் கீழே சாய்கிறான் குணசீலன்.]

வெண்பாப் போட்டி-4.

★

'காய்' என்று தொடங்கிக்
'கனி' என்று முடிக்க வேண்டும்.

இறுதி நாள் 27-8-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

வெண்பாப் போட்டி

நீர்மேல் எழுந்த நெருப்பு!

வடவர் பெருவாழ்வும் பேரரசும் மாய்ந்து
சுடுவெம் புகையாகித் தோன்றும்—படுஊழிக்
கார்மேல் இடியாய்க் கனலும் தமிழ்த்தாய்கண்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

எம்.எஸ். இராமசாமி, அருப்புக் கோட்டை.

கங்குலெலாந் தூங்கி எழுந்தேன்; கடற்கரைக்கு
வெங்குளிரும் தாக்க வழிநடந்தேன்—அங்கிருந்தும்
பார்வை நிலைக்கப் பணித்ததுவே செங்கதிராம்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

மு. இராசாங்கம், தத்தனூர்.

நானிலங்க ளென்பதனில் நல்ல மருதநிலம்
தானதனிற் றேன்றித் தழைத்ததே—மானசமாய்ச்
சீர்சால் மருத்துவர்கள் செம்மையாய்க் கண்டதே
நீர்மேல் எழுந்த நெருப்பு.

குறிப்பு:— நீர்மேல் நெருப்பு: மருத்துவர்கள் கண்ட
ஒருவகை மூலிகையாகும்.

மாயூரம். ந. இராமநாதன், கோவை.

கொஞ்சி மகிழ்ந்தானைக் கூடி யிருந்தானைச்
சஞ்சலம் சேரவே சாய்த்திட்டார்—வஞ்சகரே
மார்நோக விம்மிநீர் வார்த்தாளின் கண்களே
நீர்மேல் எழுந்த நெருப்பு.

வள்ளுவன், மஞ்சைநகர்.

கெண்டைமீன் துள்ளும்; கெளுத்தி, விரல் டாய்ந்து விழும்;
வண்டினங்கள் பண்ணிசைத்து வட்டமிடும்—தண்டெனும்
தார்மேல் சிரிக்குஞ்செந் தாமரையோ ஓடைதரும்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

கௌரி, புதுச்சேரி.

நாட்டிருளைப் போக்குவதாய் நற்பயனை நல்குவதாய்
பாட்டாளி சூழ்ந்து பணிகுவதாய்—நாட்டவரின்
நேர்மைக் கடல்வழியே நின்றுதிக்கும் செங்கதிரே
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—க. ஆ. இராசன், மோகனூர்.

செங்கதிரோன் தொட்டதனுல் சட்டென்று வாய்திறந்த
பங்கயத்தைக் கண்டு பயந்ததுமேன்?—சங்கெனவே
ஆர்த்துவரும் வண்டினமும் அங்கயலும் கண்டதுவோ
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—ரெ. துரைராசன், கொள்ளியிடம்.

அலைகடலில் தோன்றும் இளவெயிலோன் செம்மை
உலையிடும் தீப்போல் ஒளிரும்;—கலைவழிய
நேர்தோன்றும் அவ்வழகைப் பார்ப்போருக்(கு) அக்காட்சி
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—முதலியார் பேட்டை நா. பெரியசாமி, புதுவை.

கண்ணீர் நெருப்பாமோ? கத்திமுனை சாய்ந்திடுமோ?
மண்ணில்எம் காங்கிரசும் மாய்ந்திடுமோ?—என்பார்க்கு,
'பார்'என்று காட்டஅதோ! பைந்தமிழர் சிந்தும்கண்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—செல்வி, சுந்தராபுரம்.

ஓர்நொடியில் வந்திடுவேன் ஒண்டொடியே! என்றார்,
கார்காலம் வந்தும் வரக்காணேன்—நீர்வழியும்
கூர்விழிகள் அன்னவர்மேல் கொள்கோபம் நேர்காணில்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—ஆ. வி. நாதன், சென்னை-24.

குயில்பாட மெல்லக் குளிர்காற்று வீச
மயிலாடும் மாமலர்ச் சோலை—வெயிலவன்
பார்மேல் வரக்கண்டு பூரிக்கும் தாமரை
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—து. அ. சதாசிவம், செல்வைநகர்.

கச்சணிந்து நின்றாள்; கழன்றுவிழ நானணைத்தேன்;
இச்சென்று முத்தம், இதழ்விருந்து—உச்சிமுதல்
வாரி இறைத்தனளே வேக்காட்டை! கன்னியவள்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—புதுவை இரத்தின சனார்த்தனன், தாம்பரம்.

மாலை முகிழ்த்து மலராது காத்திருந்து
காலைக் கதிர்கண்டே கட்டவிழும்—சோலையிலே
பார்க்க முடியாத பங்கயத்தின் தோற்றமது
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—க. பொ. இளம்வழுதி, கலிதீர்த்தாள் குப்பம்.

ஊடிநில் என்றுரைத்தேன்; உள்ளமோ கேளாமல்
கூடிய தென்றல் சிரிக்கின்றாய்—சேடியே!
சீர்த்தநல் லன்பு சினந்திடுமோ? கண்டதுண்டோ
நீர்மேல் எழுந்த நெருப்பு?

—பா. பா. சோமநாதன் பி. ஏ., மயிலாப்பூர்.

இந்தி அரக்கியவள் ஈங்கோடி வந்ததுகண்(டு)
உந்தும் உணர்வால் உருசினங்கொள்—எந்தமிழ்த்தாய்
கூர்வேல் விழிக்குவமை கூறிடுமோ, ஆழியிலே
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—'குறள்', உப்பிலிபாளையம்

ஊர்மே லெழுந்துவா னோங்கி யெரிநெருப்பை
நீர்கொண் டெவரும் நிறுத்திடலாம்—கார்குழலே
யாரே அணைப்பார் அருங்கலத்தில் தீப்பிடித்து
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—எஸ். கணபதி, சிதம்பரம்.

காலைக் கதிரோன் கடல்மேல் எழுந்தோற்றம்
மாலைக் குளத்தில் மலர்கின்ற செங்குமுதம்
கார்மேல் ஒளிரும் ககனத்து மின்னலிவை
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—கிருட்டின [illegible] எம். காம்., சென்னை-6.

கூரையில்லா வீடுண்டு; கொண்கனில்லாப் பெண்டிருண்டு;
தாரகையும் தண்மதியும் தண்ணொளியில்—மாறுவதுண்(டு)
ஆர்கலியும் பொங்கா தடங்குவதுண்(டு); உண்டாமோ
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—மல்லிகா, கருப்பட்டிபாளையம்.

கங்குல் கலைந்தோடக் காகம் கரைந்தாடப்
பொங்கிப் பொலிதரும் பொன்னொளியாம்—செங்கதிரோன்
பார்மேல் வருவதைப் பார்த்தமரை கட்டவிழ்தல்
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—மு. சித்திமகமூதா, காரைக்கால்.

புல்லருக் கெத்தனைதான் போதனைகள் செய்தாலும்
நல்லறிவு பெற்று நடப்பரோ—வெல்விழியாய்
நீர்ந்து கெடுதலல்லால் நின்றிங் கொளி தருமோ
நீர்மேல் எழுந்த நெருப்பு.

—பரிமளம், கமுதி.

புதிய வெளியீடுகள் :

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை M. A., L. T.
வளரும் தமிழ் ரு. 3-00
வள்ளுவர் நிழல் ரு. 2-00

கவிஞர் முடியரசன்
கவியரங்கில் முடியரசன் ரு. 2-50

பி. சி. கணேசன் B. Sc., B. T.
பாவமன்னிப்பு ரு. 2-25

திருக்குறளார் வீ. முனுசாமி B. A., B. L.
திருக்குறள் இன்பம் ரு. 1-75

முத்து புத்தக நிலையம்
மேல அரண்சாலை :: திருச்சி-2.

ஆசிரியர்: கண்ணதாசன் [illegible] வெளியிடுபவர்: இராம கிருட்டிணன். ஏ. [illegible] 2/127 [illegible] ரோடு, செ[illegible] தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.